


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 280

புதன்கிழமை
03 செப்ரெம்பர் 2025

ஆவணி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# மீண்டும் போர் ஏற்பட இடமளிக்கமாட்டேன்

## வட்டுவாகலில் வைத்து ஜனாதிபதி வாக்குறுதி



**முல்லைத்தீவு, செப்ரெம்பர் 3**

**நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அனைத்து மக்களையும் அரவணைத்துச் செயற்படுவதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.**

15

## வட்டுவாகல் பாலப் பணிகள்; ஆரம்பித்துவைத்தார் அநுர!

முல்லைத்தீவு, செப். 3

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தின் அபிவிருத்திப் பணிகள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

140 கோடி ரூபா செலவில் இருவழிப் பாதை கொண்டதாக இந்தப் பாலம் அமைக்கப்படவுள்ளது.

15



### செம்மணி வழக்கை சிறப்பாகக் கையாண்ட

## நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவுக்கு பதவி உயர்வுடன் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், செப். 3

அரியாலை - செம்மணிப் புதைகுழி வழக்கை, மிகச் சிறப்பான முறையில் கையாண்டு வந்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேல்நீதிமன்ற நீதிபதிகளாக சில நீதிபதிகள் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவராகவே, நீதிபதி ஆனந்தராஜாவுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வுக்கான அனுபவத்தையும், தகுதியையும் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா நீண்ட காலத்துக்கு முன்னரே பெற்றிருந்தபோதிலும்,

15

### வடமாகாணத்தில் முதலாவது

## விதைத் தேங்காய் அலகு பளையில் நேற்றுத் திறப்பு

முல்லைத்தீவு, செப். 3

வடக்கின் தெங்கு முக்கோணத் திட்டத்தின் கீழ், வடமாகாணத்தின் முதலாவது விதைத் தேங்காய் உற்பத்தி அலகு பளையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் வருடாந்த

15



### செம்மணிப் புதைகுழியில்

## 4 என்புத்தொகுதிகள் நேற்றும் அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 3

அரியாலை செம்மணிப் புதைகுழியில் இருந்து, நேற்று மேலும் 4 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

15

## போர் முடிவுக்கு வந்ததால்தான் கச்சதீவுக்குச் செல்கிறார் அநுர

### படையினருக்காகக் குரல்கொடுப்பது அவசியம் நாமல் ராஜபக்ச எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 3

போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால்தான் ஜனாதிபதி இன்று சுதந்திரமாக கச்சத்தீவுக்குச் செல்கின்றார். எனவே, படையினருக்காக ஜே.வி.பி.யும் குரல் கொடுக்க வேண்டும் என்று நாமல்

15

## தெங்கு முக்கோண வலயம் புதுக்குடியிருப்பில் ஆரம்பம்!

முல்லைத்தீவு, செப். 3

உலக தெங்கு தின நிகழ்வுகளுடன் இணைந்த வகையில், தெங்கு முக்கோண வலயத்தின் அங்குராப்பண நிகழ்வு, புதுக்குடியிருப்பு கந்தசுவாமி ஆலய வளாகத்தில் நேற்று ஆரம்பித்து

15

### முச்சந்தி முரளி

**'சீப்பை ஒளிச்சால் கலியாணம் நிண்டிடும் எண்ட கதையா ஆளை மாத்தி விசயத்தை அமத்தலாம் எண்டு நினைக்கினமோ?'**



## இனப்படுகொலைக்கு நீதிகோரி பளையில் கையெழுத்துப் போர்

கிளிநொச்சி, செப். 3

செம்மணிப் புதைகுழி உள்ளிட்ட, வடக்கு - கிழக்கில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரியும், இனப்படு

15

### சம்பூர் மனிதப் புதைகுழி

## பட்ஜெட் அனுமதிக்கப்படாததால் பணிகள் ஆரம்பிப்பதில் இழுபறி!

திருகோணமலை, செப். 3

சம்பூரில் மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கில் அகழ்வு மேற்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படாமையால் பணிகளை ஆரம்பிப்பதில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

வழக்கு மூதூர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, பட்ஜெட்டுக்கு அனுமதி கிடைக்காத விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதைத் தொடர்ந்து, வழக்கு எதிர்வரும் 16ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

சம்பூர் பகுதியில் மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்ட பகுதியில் ஸ்கான் இயந்திரத்தின் உதவியுடன்

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4182
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 01 58 62 74
விசேட எழுத்து E

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1249
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 01 05 30 32

**NLB ஜய**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0208
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 2 2 6 2

**மெகா பவர்**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2288
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள் 22 47 59 78

**மஹஜன சம்பத**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5940
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 8 9 7 3 7 1

**தன நிதானய**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1970
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 47 59 66 76
விசேட எழுத்து E

**அத சம்பத**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0515
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 7 3 7 1

**சுப தவசக்**
திகதி 02.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0056
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 05 06 19 36



**கனகலிங்கம் திலகவதி முகவருக்கு**
**லொத்தர் விற்பனையாளர்கள் தேவை**

தேசிய லொத்தர் சபையின், அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர்களான மகாஜன சம்பத்த, ராசி அதிஸ்டம், உடனடி அதிஸ்டம் போன்ற லொத்தர்கள் விற்பனை செய்வதற்கும் சைக்கிள், மோட்டார் சைக்கிளில் அல்லது லொத்தர் கூடுகளில் லொத்தர்கள் விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

♦ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
♦விசேட தேவையுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு 077 6031 723

# உளவுத் தகவல் அடிப்படையில் வடக்கில் காணிகள் விடுவிப்பு!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு

வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் காணிகளை மீளக் கையளிக்கும் ஜனாதிபதியின் தீர்மானம் தன்னிச்சையாக எடுக்கப்பட்டதல்ல. பாதுகாப்புத்தரப்பின் ஆலோசனைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உளவுத் தகவல்களின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டது என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாட்டில் மீண்டும் போர் ஏற்படாதவாறே நாம் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம். தேசிய பாதுகாப்பில் நாம் கூடிய கவனம் செலுத்துகின்றோம். நாட்டு மக்கள் அனைவரும் அச்சமின்றி நடமாடும் சூழலை உறுதிப்படுத்துவதில் அக்கறை செலுத்துகின்றோம். மக்கள் இனிமேல் போர் என்ற ஒன்றைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது. அபிவிருத்தியை மட்டுமே சிந்திக்க வேண்டும் - என்றார். (எ-75)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு விரைவில் இடமாற்றங்கள்

கொழும்பு, செப்.3

பல சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இடமாற்றப்படவுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. பொலிஸ் நிர்வாகம், குற்றம் மற்றும் போக்குவரத்து, ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சித் துறைகள், ஊவா மாகாணம், மேல் மாகாணம், வடமத்திய மாகாணம் உள்ளிட்ட பல மாகாணங்களில் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதுதொடர்பான பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைகள் அடுத்த சில நாள்களில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று பொலிஸ்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

# குற்றக்குழு உறுப்பினர்களின் கைபேசித் தரவுகளும் ஆய்வு

கொழும்பு, செப்.3

இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட 5 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுக்களின் உறுப்பினர்களின் கையடக்கத் தொலைபேசித் தரவுகள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கொலைசெய்யப்பட்ட கணேமுல்ல சஞ்சீவவால், உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சுறுத்தல் காரணமாக ஆதித்யா என்ற புனைபெயரில் வெளிநாடு சென்றதாக பொலிஸ் காவலில் உள்ள கெஹெல்பத்தர பத்மே தெரிவித்துள்ளார். வெளிநாட்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பல குற்றங்கள் தொடர்பான தகவல்களையும் கெஹல்பத்தர பத்மே தெரியப்படுத்தியுள்ளார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)




# வசந்த கரன்னகொட எழுதிய நூலை நீக்கவுள்ள அமேசான்!

கொழும்பு, செப்.3

முன்னாள்கடற்படைத்தளபதிவசந்த கரன்னகொட எழுதிய புத்த கத்தை பிரிட்டனில் விற்பனையிலிருந்து நீக்குவதற்கு அமேசான் தளம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தப் புத்தகம் வசந்த கரன்னகொடவின் சுயசரிதையாகும். ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட புத்தகங்களையும் விற்பனை செய்யும் இலத்திரனியல் சந்தையான அமேசானின் பிரிட்டன் கிளைக்கு, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரன்னாகொடவின் புத்தக விற்பனை பிரித்தானிய தடைச்சட்டங்களை மீறும் என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமேசான் நிறுவனத்துக்குச் சுட்டிக்காட்டியிருந் தது. இந்தக் கோரிக்கைக்கு அமேசோனின் பிரிட்டன் கிளை எழுத்து பூர்வமாக பதிலளித்துள்ளது என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் கூறுகிறது. 2005 மற்றும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் உள்நாட்டுப் போரில் கடற்படைத் தளபதியாகப் பணியாற்றியபோது, நீதிக்குப் புறம்பான கொலைகள் உட்பட மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட குற்றச்சாட்டில், வசந்த கரன்னாகொடவுக்கும் மேலும் நால்வருக்கும் பிரிட்டன் அரசாங்கம் தடை விதித்துள்ளது. (எ-இ)

# ஊழல் குற்றச்சாட்டு; 7 மாதங்களில் 49 பேர் கைது!

கொழும்பு, செப்.3

2025ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளுக்காக மொத்தம் 49 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 3 ஆயிரத்து 937 முறைப்பாடுகள் கிடைத்தன என்றும், அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட 72 சோதனை நடவடிக்கைகளில் 39 சோதனை நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளன என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பல சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்என்றும்ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (எ-25-இ)



**சுபிரி தன சம்பத**
வெற்றி வாரம் 0648
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 8 1 0 8 1 4

**Super Ball** DLB
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2914
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கம் 23 28 34 57

**சனிதா** DLB
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 31 38 45 50
வெற்றி வாரம் 5075

**SASIRI** DLB
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0761
வெற்றி இலக்கம் 27 45 47

**லக்ன ராசி** DLB
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம் 01 06 40 45
சீட்டிழுப்பு வாரம் 4626

**KAPRUKA** DLB
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கம் 25 47 60 74
வெற்றி வாரம் 2090

**அத கோடிபதி** DLB
திகதி 02.09.2025 தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 13 14 19 76
வெற்றி வாரம் 2740

# சுற்றுலாவிகளின் வரவு அதிகரிப்பு

கொழும்பு, செப்.3

கடந்த மாதம் இலங்கைக்கு ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 235 சுற்றுலாப்பயணிகள் வந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கை வந்த சுற்றுலாப்பயணிகளுடன் ஒப்பிடும்போது, இது 20.4 வீத அதிகரிப்பு என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை வெளியிட்ட அண்மைய தரவுகளின்படி, கடந்த ஓகஸ்ட் மாதம் இந்தியாவிலிருந்து 46 ஆயிரத்து 473 சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்துள்ளனர். பிரிட்டனில் இருந்து 19 ஆயிரத்து 764 பேரும், ஜேர்மனியிலிருந்து 12ஆயிரத்து 500 பேரும், சீனாவிலிருந்து12 ஆயிரத்து294 பேரும்பிரான்ஸிலிருந்து 10 ஆயிரத்து 495 பேரும், இலங்கைக்கு வந்துள்ளனர். இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இலங்கை வந்த சுற்றுலாப்பயணி களின் எண்ணிக்கை 15 இலட்சத்து 66 ஆயிரத்து 523 என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்சவுக்கு 400 ஆண்டுகள் சிறை!

### வலியுறுத்துகிறார் பொன்சேகா

**கொழும்பு, செப்.3**

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்கவேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மஹிந்த ராஜபக்சவின் 2010 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலேயே கடுமையான ஊழல்கள் நடைபெற்றுள்ளன. 2010 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச சீனாவுக்குச் சென்றபோது 65 பேர் ஶ்ரீலங்கன் விமான சேவை ஊடாக அதிகாரபூர்வமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ரணில் விக்கிரமசிங்க விடயத்தில் அரசாங்கம் செயற்பட்ட விதத்தை வரவேற்கின்றேன். அவர் செய்தது சரி என்று நான் கூறமாட்டேன். ஆனால் அவரது நிலையைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கின்றது. அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டுவந்தவர். ரணில் விக்கிரமசிங்க கைது விடயத்தில் தற்போதைய அரசாங்கத்தின் முன்னுதாரணத்தை ஏற்றுக்கொள்கின்றேன். அந்த முன்னுதாரணத்தின் அடிப்படையில் ராஜபக்ச போன்ற ஒருவருக்கு 400 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கவேண்டும்.

எனக்கு நெருக்கமானவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஜெனரல்கள், பிரிகேடியர்கள், மேஜர்கள் மற்றும் கேணல்கள் உட்பட 35 மூத்த இராணுவ அதிகாரிகளை ஓய்வூதியம் இல்லாமல் இராணுவ சேவையிலிருந்து மகிந்த ராஜபக்ச அரசாங்கம் வெளியேற்றியது-என்றார். (எ-25-இ)

## புலிப்புராணத்தை மீளக் கையிலெடுத்த நாமல்

கொழும்பு, செப்.3

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இன்னும் கருத்தியல் ரீதியில் தோற்கடிக்கப்படவில்லை. விடுதலைப்புலிகளுக்காக சர்வதேசத்தில் நினைவகம் அமைக்கப்படுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்த படையினர் மீண்டும் வேட்டையாடப் படுகின்றனர். புலிகள் அமைப்பு கட்டமைப்பு ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும், அதன் பிரிவினைவாதக் கருத்தியல் இன்னும் ஒழிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளுக்கு சர்வதேசத்தில் நினைவகம் அமைக்கப்படு கின்றது. ஆனால் படையினருக்கு அமைத்தால் அதை இனவாதமாகக் காட்டமுயல்கின்றனர். முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவர் சிறைவைக்கப்பட்டுள்ளார்.

அடையாள அணிவகுப்பில் புலி உறுப்பினர் ஒருவரே சாட்சியமளித்துள்ளார். இவ்வாறான நிலைமை வரும் என்று அந்தக் கடற்படைத் தளபதி நினைத்தும் பார்த்திருக்கமாட்டார். எமது நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த படையினரை நாம் காக்கவேண்டும்- என்றார். (எ-25-இ)

## தடையை நீக்க ஐ.தே.க. முடிவு!

கொழும்பு, செப்.3

ஐக்கிய தேசியக் கட்சியால் உறுப்புரிமை இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள, தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கத்துவம் வகிப்பவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்சித் தடையை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. மாநாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதிகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கமுடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவும் இந்த நிகழ்வில் சிறப்பு உரையொன்றை நிகழ்த்த உள்ளார். (எ-இ)



## மருத்துவர் நியமனங்கள் விரைவில் வழங்கப்படும்

**சுகாதாரப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு**

கொழும்பு, செப்.3

மருத்துவர்களுக்கான நியமனங்கள் புதிதாக வழங்கப்படவுள்ளன. சுகாதாரப் பணிப்பாளர்களால் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று சுகாதார, ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நியமனங்களில் நாம் அரசியல் ரீதியில் தலையிடப்போவதில்லை. சில அதிகாரிகள் எமக்குச் சரியான தகவல்களை வழங்குவதில்லை. இதனாலேயே ஒரு சிலர் ஒரே இடத்தில் நீண்ட காலம் பணியாற்றும் நிலை காணப்படுகின்றது.

தமக்குரிய பொறுப்புகளை மீறுவோர் அல்லது தொடர்பற்ற விடயங்களில் தலையிட்டுப் பிரச்சினைகளை உருவாக்கும் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-இ)

## மருந்துத் தட்டுப்பாடு இப்போது இல்லை!

*பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவிப்பு*

கொழும்பு, செப்.3

அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு எதுவும் இல்லை என்று சுகாதார, ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது அரச மருத்துவமனைகளில் மருந்துகளுக்கும் மற்றும் செயற்கையாகப் பொருத்தப்படும் கண் வில்லைகளுக்கும் தட்டுப்பாடுகள் கிடையாது.

சிலர் குறிப்பிட்ட நிறுவனங்களின் மருந்துகளை மட்டும் தேடும்போது அவை திறந்த சந்தைகளில் இல்லாது இருக்கலாம்-என்றார். (எ-இ)




## மாறாம இருக்கிறதும் மாற்றமோ?

மாற்றம் ஒண்டுதான் மாறாதது எண்டுவினம். ஆனால் மாற்றத்தைக் கொண்டுவரப்போறம் எண்டு அடம்பிடிக்கிறவைகூட சில வில்லங்கமான விசயங்களில முந்தின அரசாங்கங்களில இருந்து மாறமாட்டம் எண்டு ஒற்றைக்காலில நிக்கினம். அநுரவின்ர யாழ்ப்பாண விசிட் இந்தமுறை கனக்கப் பூகம்பங்களை உருவாக்கிப் போட்டுது. 'எங்களுக்குப் பாதுகாப்புத் தேவையில்லை, முந்தின ஜனாதிபதியளுக்கும் பாதுகாப்புக் குறைப்பம், இப்பிடிப் பாதுகாப்பு எண்டு சொல்லி அநியாயமாச் செலவழிக்கிற காசை உருப்படியா பாவிச்சு நாட்டை முன்னேற்றுவம்' எண்டதுதான் திசைகாட்டியாக்களின்ர கொள்கையா, கோசமா இருக்குது. ஆனால் முந்தநாள் அநுர வாறார் எண்டவுடன யாழ்ப்பாணத்தில இதுவரைக்கும் எந்த ஜனாதிபதிக்கும் குடுக்காத அளவுக்கு றோட்டு முழுக்க ஆமியும், பொலிஸுமா நிறைஞ்சு கிடந்தது. முந்தின ஜனாதிபதியள் வரேக்க, சந்தியளில ஒவ்வொரு ஆமிக்காரர் நிப்பினம். இந்தமுறை ஒவ்வொரு சந்தியிலையும், குச்சொழுங்கையளிலையும் மூண்டு நாலு ஆமிக்காரர் நிண்டவை. வழக்கத்தைவிட மூண்டுநாலுமடங்கு பாதுகாப்பு.

இப்பிடித் தேவையில்லாம ஆமிக்காரரை நிப்பாட்டி வைச்சால், அவையள் சனங்களோட தேவையில்லாமல் மிண்டி, தேவையில்லாத வில்லங்கங்களைக் கொண்டுவரத்தானே செய்வினம். முந்தநாளும் அதுதான் நடந்தது. மயிலிட்டிக்கு வாற அநுரவிட்ட, தங்கட காணியளை விடுவிக்கச் சொல்லிக் கேப்பம் எண்டு றோட்டுக்கரைக்கு வந்த சனத்தை அடிச்சுக் கலைச்சு தங்கட வீரத்தைக் காட்டியிருக்கினம் பொலிஸ்காரர். இத்தனைக்கும் அந்தச் சனங்கள் ஒரு நாலைஞ்சு பேர்தான். ஜனாதிபதிக்கு அவை எதிர்ப்புக் காட்ட வரேலை, தங்கட காணியையும் விடுங்கோ எண்டு கேக்க வந்தவையை இப்பிடி நாயைக் கலைக்கிறமாதிரி அடிச்சுக் கலைச்சதெல்லாம் முந்தின அரசாங்கங்கத்தில எப்பிடி அவிட்டு விட்ட அல்சேசன் மாதிரி பொலிஸ்காரர் கடிச்சுக் குதறுறமாதிரி நிண்டினமோ அப்பிடித்தான் இப்பவும் நிக்கினம் எண்டதைத்தானே காட்டுது.

இன்னொரு விசயமும் சொல்லோணும். சொன்னநேரத்துக்குப் பிந்தி ஒரு நிகழ்ச்சியை வைக்கிறது எவ்வளவு பிழையோ அப்பிடி சொன்ன நேரத்துக்கு முந்தியும் அதை நடத்திறது பிழைதான். மண்டைதீவு கிரிக்கெட் கிரவுண்டுக்கு அடிக்கல் நடுறது மூண்டு மணிக்கு எண்டுதான் மீடியாக்காரருக்கு அறிவிச்சிருந்தவை. ஆனால் அநுர தன்ர பிளானைத் திடீரெண்டு மாத்தி கச்சதீவு போக வெளிக்கிட்டதால, ஒரு மணித்தியாலம் முந்தி ரண்டு மணிக்கே அடிக்கல்லை நட்டிட்டார். ஆனால் இப்பிடி நேரம் மாத்தின விசயம் மீடியாக்காரருக்கு அறிவிக்கேல, அதால அவை 'மூண்டு மணிக்குத்தானே புரோக்கிராம்' எண்டு ரண்டே முக்காலுக்கு அங்க போனால், அடிக்கல் எல்லாம் நட்டு முடிஞ்சுதாம். என்னதான் திடீர்ப் பிளான் எண்டாலும், அந்த மாற்றங்களை மீடியாக்காரருக்கும் அறிவிச்சிருக்கலாமெல்லோ. அதைவிட ஊர்ச்சனமும் வெயில் தாழ மூண்டுமணிக்குத்தான் போக இருந்தவை. அவையிலயும் கனபேர் ரண்டுமணிக்கே அடிக்கல்லை நட்டதால, பிறகு போகேலையாம். இப்பிடியெல்லாம் சனத்தையும், மீடியாவையும் மதிக்காத போக்கு. திசைகாட்டிக்காரரிட்ட இதுவரைக்கும் இல்லை. ஆனால் இப்ப வந்திருக்கு. அது நல்லதுக்கில்லை கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** தந்தைவழி உறவுகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டுநீங்கும். குடும்பம்தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். நண்பர்களிடம் காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** சிலருக்குத் தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் நண்பர்கள் மூலம் கேட்கும் செய்தி உங்களை உற்சாகப்படுத்தும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



### அந்த நாள் ஞாபகங்களின் அழியாச் சுவடு

# 'கசற்றுகள்'

■ கே.அம்சவிர்தன்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" தமிழ் இலக்கிய மரபு. நம் வாழ்வில் பல புதிய விடயங்கள் புகுத்தப்பட்டாலும், அதற்காகப் பழைய விடயங்களை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்ற அவசியம் இல்லை. 90களின் பொற்காலமாக இருந்தவை "கசற்றுகள்". கேசட்டுகள் வெறும் இசைச் சாதனங்கள் மட்டுமல்ல. அவை ஒரு சகாப்தத்தின் உணர்வுகளையும், நினைவுகளையும் சுமந்து நின்ற காலப்பெட்டகங்கள். அக்காலத்தில், ஒரு பாடலைக் கேட்கவேண்டுமென்றால், நாம் ஒரு டேப் ரெக்கார்டரை எடுத்து, கசற்றை உள்ளே வைத்து, 'பிளே' பட்டனை அழுத்துவோம். பாடல் தேடலுக்கு முன்னோக்கிச் செலுத்துவதோ அல்லது பின்னோக்கி இழுப்பதோ ஒரு கலைவடிவம். விரல்நுனியில் பென்சிலைப் பயன்படுத்திக் கேசட்டின் நாடாவைச் சுற்றிய அனுபவங்கள், 90களில் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

அந்த நாள்களில், ஓர் ஆல்பத்தின் அனைத்துப் பாடல்களையும் வரிசையாகக் கேட்டு ரசிப்போம். ஒரு கேசட்டு டேப்பில் உள்ள பாடல் இளையராஜாவின் அல்லது தேவாவின் இசைப்பயணமாக இருந்தது. காதல் என்பது எந்தக் காலத்திலும் மாறாத உணர்வு, ஆனால் காதலை வெளிப்படுத்தும் வழிமுறைகள் காலத்திற்கேற்ப மாறுபடுகின்றன.

90களின் கசற் பிளேயர்களில் ஒலித்த காதல் கதைகளுக்கும், இன்றைய ஸ்மார்ட்போனில் விரியும் காதல் கதைகளுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. வெறும் தொழில்நுட்ப மாற்றம் மட்டுமல்ல, அது ஒரு முழுமையான கலாசார மற்றும் மனோபாவ மாற்றம். 90களின் காதலில் ஏக்கம், தவிப்பு என்ற கவிதையான உணர்வுகள் காணப்பட்டன. அதாவது, காதலன் காதலியைச் சந்திப்பது மிக மிக அரிதானது. அத்துடன், காதலி வரும்போதும் போகும்போதும் "கசற்றில்" காதல் பாடல்களை எல்லாம் ஒலிக்கவிடுவதும்கூடக் காதல் கவிதைக்கு இணையானதே. அதற்கெல்லாம் வழி சமைத்தவை இந்த "கசற்றுகள்". ஆனால் தற்போதைய காதலோ, எங்கேயும் எப்போதும் காதலரைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பங்களுக்கு வழி சமைக்கின்றன. அப்போது கசற்றுகள் தனிப்பட்ட மனிதனின் விருப்பமாக இருந்தது. அதன் உள்ளே இருக்கும் பாடல்களும், அதன் வெளியீடும் அந்த நாள்களில் ஒரு பெரிய நிகழ்வாக இருந்தது. இன்றும் பலருக்கு, அந்தக் கசற்றுகளின் அட்டைகளும் அதன் வடிவமைப்பும் ஒரு பொக்கிஷமாக இருக்கிறது.

ஆனால் இன்று, கசற்றுகளின் மீதான மோகம் ஒரு முற்றிலும் மாறுபட்ட பரிமாணத்தை அடைந்திருக்கிறது. இது ஒரு கலைப்பொருளாக, அல்லது ஒரு பழங்காலப் பொருட்களைச் சேகரிப்பது போன்ற ஒரு நடவடிக்கையாக மாறியுள்ளது. இன்று கசற்றுகளை வாங்குபவர்கள் பாடல்களுக்காக அதை வாங்குவது கிடையாது. மாறாக, அதன் அட்டைப்படத்தின் கலைத்திறன், அதன் வடிவமைப்பு மற்றும் அது தரும் பழைய காலத்து உணர்வு ஆகியவற்றுக்காகவே வாங்குகிறார்கள். இந்த மோகம் ஒரு நோஸ்டால்ஜியாவை அடிப்படையாகக் கொண்டது. இது, 90களில் இருந்த உண்மையான கசற் அனுபவத்தைப் பிரதி பலிக்கவில்லை. அப்போது கேசட் ஓர் இசைவடிவமாக இருந்தது, இன்று அது ஒரு காட்சிப்பொருளாக மாறிவிட்டது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" நம் தமிழ் இலக்கிய மரபு. நமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற விடயங்களில் ஒன்றான கசற்றுகளைப் பேணிப்பாதுகாக்கவேண்டும். அதனை ஓர் அழகுப் பொருளாக மட்டும் பார்ப்பதை விடுத்து, அதனைப் பொக்கிஷமாகப் பேணிப்பாதுகாக்க வேண்டும்.



வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய விசுவாவசு வருடப் பெருவிழாவின் பத்தாம் நாள் காலை உற்சவமான பூங்காவன உற்சவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. [illegible]

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.3

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 37ஆவது சொற்பொழிவு சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள் ஆசியுரையையும், பரிபாலனசபைத் தலைவர் சி.தயாநாதன் தலைமையுரையையும், சைவப்புலவர், பிரசங்கபூஷணம் பொன். சந்திரவேல் "எதிர்கொள் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவையும் ஆற்றவுள்ளனர். (எ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச யோகா வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப்.3

வடமாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவச யோகாப் பயிற்சிநெறியின் புதிய பிரிவுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த வகுப்புகள் எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் 3 மாதங்கள் வார இறுதிநாள்கள் மற்றும் அரச விடுமுறை நாள்களில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் காலை 6 மணி தொடக்கம் காலை 8 மணி வரை நடைபெறவுள்ளன. இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து பயிற்சி நடைபெறும் இடத்துக்கு காலை 6 மணிக்கு வந்து வளவாளரிடம் படிவத்தை ஒப்படைத்து விட்டு பயிற்சியில் இணைந்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் இணையவருவோர் தளர்ச்சியான ஆடை அணிந்து, யோகா பயிற்சிக்கான விரிப்பையும் எடுத்துவரவேண்டும் என்றும், பயிற்சி முடிவடைந்தவுடன் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## செயற்பாட்டு அறைத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் ஆங்கிலச் செயற்பாட்டு அறை திறப்பு விழா இன்று புதன்கிழமை மு.ப 9.06 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை முதல்வர் பா.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் பொருளாளர் சி.ஆனந்த கிருஸ்ணா, சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப் பாளர் சோ.ராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-25)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

மானிப்பாய் உடுவில் பிரதான வீதியில் 5 1/2 பரப்பு காணி, வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

உரிமையாளர்:- 076 322 5545

**திருநெல்வேலி காணி விற்பனைக்கு**

பரப்பு - 02, 2 1/2
மக்கள் வங்கி - 100 மீற்றர்
பலாலி வீதி - 75 மீற்றர்
தொடர்புகளுக்கு:-
077 253 2575

(CS/39281) J-1

BOC CONNECT

எனும் முகவர் வங்கிச்சேவை ஊடாக
யாழ்ப்பாணத்தின் அனலைதீவுக்கு
வங்கிச் சேவைகளை விஸ்தரிக்கின்றது
இலங்கை வங்கி !




அனைத்து இலங்கையர்களுக்கும் நிதிச் சேவை என்ற இலக்கினை நிறைவேற்றும் வகையில் இலங்கை வங்கியானது தனது BOC Connect எனும் முகவர் வங்கிச் சேவையின் ஊடாக அனலைதீவு மக்களும் வங்கிச் சேவையின் உன்னதங்களை அனுபவித்திடும் வாய்ப்பை வழங்குகின்றது!

இலங்கை வங்கியின் வங்கிச்சேவை வசதிகளை அனுபவித்திட BOC Connect வழங்கும் கீழ்வரும் சேவைகளை நாடுங்கள்!

**BOC Connect ஊடாக நீங்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள்**

• பணத்தை வைப்பிலிடல் • பணம் மீளப் பெறல் • பணப்பரிமாற்றம் (BOC கணக்குகளுக்கு மாத்திரம்)
• கடன் அட்டை கொடுப்பனவுகள் • பில் கொடுப்பனவுகள் • கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவுகள்

**இன்று நடைபெறும் மாபெரும் திறப்பு விழாவில் எம்மோடு இணையுங்கள்!**

விநாயகர் ஸ்டோர்ஸ்,
5ஆம் வட்டாரம், அனலைதீவு தெற்கு,
அனலைதீவு.

அனலைதீவு தபால் அலுவலகம்,
தபால் அலுவலகம்,
அனலைதீவு.

1975 BOC www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கொப்பறா விற்பனை

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா 06.09.2025 சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் தேருக்கு உடைக்கப்படும். தேங்காய் கொப்பறா விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் **05.09.2025 நண்பகல் 12.00 மணிக்கு முன்னர்** எழுத்து மூலம் **செயலாளர் ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்** என்ற முகவரிக்கு தபால் மூலம் அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும். கூடுதல் கேள்வி கோருபவருக்கு கொப்பறா வழங்கப்படும்.

**குறிப்பு:-**

அன்றைய தினமே பணத்தை செலுத்தி கொப்பறாவை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பரிபாலன சபை

(CS 59303) A

## வட இலங்கைச் சங்கீத சபை வருடாந்த பொதுக்கூட்டம் - 2025

வட இலங்கைச் சங்கீத சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் 07.09.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு சபையின் தலைவர் (யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்) திருமதி மாலதி முகுந்தன் தலைமையில் வட இலங்கைச் சங்கீத சபை மண்டபத்தில் நடைபெறும்.

வருடாந்த பொதுக் கூட்டம் தொடர்பான அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ள சகல ஆயுட்கால உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

திருமதி மாலதி முகுந்தன்
தலைவர்
வட இலங்கைச் சங்கீத சபை
(யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்.)

உதவிச் செயலாளர்
வட இலங்கைச் சங்கீத சபை

(CR 45975) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்பு:077 386 6250**

(CS 59300) A


# அரசகேசரிப் பிள்ளையாருக்கு தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், செப்.3


நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்குத் தீர்த்தத்திருவிழா நடைபெறவுள்ளது. ஆலயத்தின் மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. (எ-25,17)

# பனைகளுக்குத் தீவைத்த விசமிகள்

தனியார் காணிக்குள் அத்துமீறி நுழைந்த விசமிகள், அங்கிருந்த பனைமரங்களுக்குத் தீவைத்துள்ளனர். இதனால் பழமையான மரங்கள் பல தீயில் கருகியுள்ளன.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தின் மண்ணியாகுளம் குடியேற்றப் பிரதேசத்தில் நடந்துள்ளது. சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால், அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பெண்ணொருவருக்குச் சொந்தமான 24 ஏக்கர் காணிக்குள் இருந்த பனை மரங்களுக்கே தீவைக்கப்பட்டுள்ளது. இதனால் பழமைவாய்ந்த பனங்கூடல்கள் தீயில் கருகியதுடன், சில பனை மரங்கள் முற்றாக வெட்டியும் அழிக்கப்பட்டுள்ளன. காணி உரிமையாளருக்குக் கிராம மக்கள் வழங்கிய தகவலை அடுத்து, பனை அபிவிருத்திச்சபைக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன், பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆயினும் திணைக்களத்தினரோ, பொலிஸாரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (எ-66)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.08.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் மாணிக்கவாசகர் புவனேந்திரன்**

(முன்னாள் கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (04.09.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி - புவனேந்திரன் கண்மலர் (முன்னாள் ஆசிரியர்)
மகள் - மலர்மகள் தயாபரன் (சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)
மகன், மருமகள் - காண்டீபன், சுலோஜனா

83/7 ஆனைவிழுந்தான் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.

077 088 1594, 076 386 9641, 021 222 7228

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 05 . 1979



மறைவு
01 . 09 . 2025

**பால்ராஜ் கிருசாந்தினி**

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பால்ராஜ் கிருசாந்தினி அவர்கள் கடந்த (01.09.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நல்லூர்
076 280 6356

தகவல்:
குடும்பத்தினர்.
(கணவர், மகள், மருமகன்)

## பெயர் மாற்றம்

தாமோதிரம் பிள்ளை வீதி, மீசாலை தெற்கு மீசாலை சாவகச்சேரியில் வசிக்கும் சின்னத்தம்பி குணரத்தினம் ஆகிய நான் எனது பெயரை சின்னத்தம்பி நல்லையா என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சின்னத்தம்பி நல்லையா என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**சின்னத்தம்பி நல்லையா**


## வேலைவாய்ப்புகள்

- Recovery Officer : 0764869146
- Gold Loan Officer : 0764800894
- Waiter : 0774078235
- Banner Machine Operator (Vavuniya) : 0777166601
- Graphic Designer : 0776216741
- Decoration Helpers : 0777750318
- விற்பனையாளர் : 0775503314
- Montessori Teacher : 0777009653
- House Keeping(Girls) : 0760770373
- Packing : 0774195209
- Baber : +4747977777
- Waiter (Kilinochchi) : 0777111831
- Sales Assistant : 0752217661
- Assistant Manager : 0772019313
- Pharmacist(Kilinochchi) : 0769835289

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு :
**dewmasweb.com**

வேலையாட்கள் தேவையா?
**0760984532**

**DEWMAS**, 51, Amman Road, Nallur


## தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து) கைதடி
## கூறு விலை கோரல்

சங்கத்திலுள்ள பின்வரும் பழைய பாவித்த பொருட்களை விற்பனை செய்ய வேண்டியுள்ளதால் பெறவிரும்புவோர் பொருட்களை பார்வையிட்டு 16.09.2025 ற்கு முன்னர் மூடிய கூறு விலைகளை சமர்பிக்கும்படி கேட்டுகொள்ளப்படுகின்றது.

தொடர்புகளுக்கு - 0212057004 / 0779525331

| இல | வெற்றுப்போத்தல்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | யானை சோடா போத்தல்கள் (85c/sx24) | 2040 |
| 2 | Merinda(42x24) | 1008 |
| 3 | Necto வடி (43x24) | 1032 |
| 4 | COCOCOLA வடி(16X24) | 384 |
| 5 | Kik Cola M போத்தல்கள் (29x24) | 696 |
| 6 | COCOCOLA M(16X24) | 216 |
| 7 | Ole M சோடா போத்தல் | 68 |
| 8 | Pepsi M போத்தல்கள் (69x24) | 1656 |
| 9 | 7Up சோடா போத்தல்( 26x24) | 624 |
| 10 | 7Up சோடா போத்தல்(பெரிது) | 39 |
| 11 | Fanta M போத்தல்கள் (3x24) | 72 |
| 12 | COCOCOLA (1L போத்தல் ) | 11 |
| 13 | நெல்லிக்கிறேஸ் போத்தல் (1L) | 27 |
| 14 | நல்லெண்ணெய்வெற்றுப்போத்தல்750 ML | 220 |
| 15 | நல்லெண்ணெய் போத்தல்(1/2 L) | 57 |
| 16 | வேறுவகைப்போத்தல்கள் | 297 |
| 17 | பழைய ஓடுகள் | 840 |
| 18 | உடைந்த மரத்தளபாடங்கள் | |

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி -
பொதுமுகாமையாளர்
தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து)
மானிப்பாய் வீதி, கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# அநீதியின் பாதையில் அநுர அரசாங்கமும்..?

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது கவனிக்கத்தக்க இரு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. முதலாவது இராணுவத்தால் அடாத்தாகக் கைப்பற்றப்பட்டிருக்கும் தங்களது காணிகளை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் ஒன்றுகூடிய அப்பாவி மக்கள் பொலிஸாரால் பலாத்காரமாக அகற்றப்பட்டிருந்தனர். இரண்டாவது பொதுமக்களின் காணிகளை சட்ட விரோதமாகக் கைப்பற்றி விகாரை அமைத்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படும் ஒருவர் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வொன்றுக்கு அழைக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டிருக்கின்றார்.

வடக்கில் பொதுமக்களின் காணிகளை அடாத்தாகக் கைப்பற்றிவைத்திருக்கும் இராணுவத்தினர் அவற்றின் பயன்களை நிறைவாக அனுபவித்துவருகின்றனர். பாதுகாப்பைக் காரணம்காட்டி காணிகளை அபகரித்து, அவற்றால் இராணுவம் வருமானம் ஈட்டிவரும் நிலையில், அந்தக் காணிகளின் உரிமையாளர்களான அப்பாவி மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துவருகின்றனர். தங்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று அந்த மக்கள் பல ஆண்டுகளாகக் கோரிவருகின்றபோதும் அவர்களின் கோரிக்கைகள் காதில் விழுத்தப்படுவதில்லை. தாம் வாழும் காலத்தில் அந்தக் காணிகளுக்குச் சென்றுவிடமாட்டோமோ என்ற ஆதங்கத்துடனே அவர்கள் தங்களின் காணிகளை மீட்கும் போராட்டங்களில் பங்கெடுக்கின்றனர். தங்களின் ஆதங்கங்களை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினால் தங்களுக்குத் தீர்வு கிட்டலாம் என்ற நப்பாசையுடன் வந்த அந்த அப்பாவிமக்கள் -வயதில் முதிர்ந்தவர்கள் ஜனாதிபதியின் வருகையின்போது பொலிஸாரால் பலாத்காரமாக அகற்றப்பட்டனர்.

ஆனால் பொதுமக்களின் காணிகளைச் சட்டவிரோதமாகக் கைப்பற்றி 'முறையான அனுமதிகள் எவையும் பெறாது விகாரை ஒன்றைக் கட்டிய பௌத்த தேரர்' இன்னும் சொல்லப்போனால் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டிய ஒருவர் ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார். ஜனாதிபதியும், அமைச்சர்களும் பங்கேற்கும் நிகழ்வுக்கு - பொதுமக்களின் காணிகளைச் சட்ட விரோதமாக அபகரித்த ஒருவர் அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவது, ஜனாதிபதியும், அரசாங்கமும் கூறும் சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை நிச்சயம் கேள்விக்குட்படுத்தும். தற்போதைய அரசாங்கமும், முன்னைய அரசாங்கங்களைப் போன்று தெற்கையும், பௌத்த மேலாதிக்கச் சிந்தனையாளர்களையும் திருப்திப்படுத்த முயல்கின்றதா என்ற சந்தேகமும் எழவே செய்கின்றது.


நாட்டின் சிறுபான்மை மக்களான தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களில் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்கள் பாதுகாக்கப்பட்டு, மரியாதை செய்யப்படுவது இலங்கையில் புதிதல்லவே. உள்நாட்டுப் போர் நடைபெற்றபோதும், இறுதிப் போரின்போதும் தமிழ் மக்களுக்கு எதிரான 'மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்கள்கூட, கடந்தகால அரசாங்கங்களால் பாதுகாக்கப்பட்டனர். உயர் பதவிகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கமுயலாது குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் பாதுகாக்கும் கடந்தகால அரசாங்களின் போக்கே தமிழ் மக்கள் தெற்கில் நம்பிக்கை இழப்பதற்கு மூலகாரணமாக இருந்தது. மாற்றம் என்பதை முன்னிறுத்தும் தற்போதைய அரசாங்கமும் இந்த அநீதிப்போக்கில் இருந்து விலகிச் செயற்படத் தயங்குவது துரதிர்ஷ்டவசமானது. தமிழ் மக்கள் உள்ளக நீதிப் பொறிமுறை மீதுநம்பிக்கையற்றுநிராகரிப்பதற்கும், வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறையை நாடுவதற்கும் நாட்டில் நிலவும் இந்தப் போக்கே காரணம். அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முதலில் இந்த நிலைமையை மாற்ற முயற்சிக்க வேண்டுமே தவிர, தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு அரசியல்சாயம் பூசுவதை நிறுத்த வேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

கல்வியின் உயர்ந்த நோக்கம் அறிவு அல்ல செயல்.

ஹெர்பர்ட் ஸ்பென்சர்




# பொறுப்புக்கூறலில் தப்பிப்போரை சர்வதேசக்கூண்டில் நிறுத்துங்கள்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

**புதைகுழிகளை அகழ்வது மட்டும் நீதியை வழங்காது! குற்றவாளிகள், அதிகாரத்தில் இருப்பவர்களும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்பட வேண்டும். உண்மையை வெளிக்கொண்டுவரவும் குற்றவாளிகளைத் தண்டிக்கவுமான நம்பகமான சர்வதேசப் பொறிமுறைக்கு வழிவகுக்கவேண்டும். இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.**

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழிகளில் செம்மணி மனிதப் புதைகுழியும் ஒன்றாகும். இருப்பினும், புதைகுழிகளை அகழ்வது மட்டும் நீதியை வழங்காது. குற்றவாளிகள் மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும். ஓர் அரசு தனது சொந்தக் குற்றங்களை நம்பகத்தன்மையுடன் விசாரிக்கமுடியாது என்பது மறுக்கமுடியாத உண்மை. போரின் இறுதிநாள்களில், ஸ்ரீலங்கா அரச படைகள் சரணடைந்தவர்களுக்குப் பாதுகாப்பான விடுதலையை உறுதியளித்தன. மாறாக, அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இன்று பல புதைகுழிகள் வெளிவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவர்கள் தொடர்பான அச்சம் மேலும் வலுப்பெறுகின்றது.

எனவே குற்றவாளிகள் எங்கு சென்றாலும் நீதியை எதிர்கொள்வதை உறுதிசெய்ய உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்தவேண்டும் என்று ஐ.நா. உறுப்பு நாடுகளை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ச-66)



# தங்கத்தின் விலை அதிகரிப்பு

கொழும்பு, செப்.3

கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது நேற்றுமுன் தினம் தங்கம் பவுண் ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபாவால் அதிகரித்திருந்த நிலையில், நேற்று மீண்டும் 2 ஆயிரம் ரூபாவால் அதிகரித்தது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று 24 கரட் பவுண் 2 இலட்சத்து 82 ஆயிரத்து ரூபாவாகவும், 22 கரட் பவுண் 2 இலட்சத்து 60 ஆயிரத்து 800 ரூபாவாகவும் காணப்பட்டது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (எ-இ)

# கைத்தொழிலுக்கு 50,000 ஏக்கர் காணி

கொழும்பு, செப்.3

நாடு முழுவதும் கைத்தொழில்களுக்கு ஏற்ற 50 ஆயிரம் ஏக்கர் காணியை ஒதுக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் குறித்த துறைசார் மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்திட்டம் தொடர்பாகக் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழு, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றைக் கலந்தாலோசித்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று குழு பரிந்துரைத்தது. (எ-இ)



# அரச ஊழியர்கள் சம்பளம் அடுத்த ஆண்டில் உயரும்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

அரசாங்க ஊழியர்களுக்கான நிலுவைச் சம்பள உயர்வை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்த விடயத்தையும் குறிப்பிட்டுள்ளார். அடிப்படைச் சம்பளத்தின் ஆரம்ப உயர்வு இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வழங்கப்பட்டது. நிலுவைச் சம்பள உயர்வை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-25-இ)

நாளை
வியாழக்கிழமை - ஆவணி 19
04.09.2025
சுபநேரம் : 07.35 - 09.05
ராகுகாலம் : 01.35 - 03.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவிஸ் கல்யாண சுப்பிரமணியர் ஆலய அடியவர்களின் தாயக மாணவர்களுக்கான
# கல்வி முன்னேற்றத்திற்கான வெற்றிவிழா

(31.08.2025)

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை (குறள் - 400)

இடம் - சிகரம் கல்வி நிலையம் பாண்டியன்குளம்

என்ற குறளின் மகிமைக்கிணங்க தாயகத்தில் வன்னியில் கல்விக்கண்திறந்து - தேவை நாடும் மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்கி வருகிறார்கள் சுவிஸ் - பேர்ண் ஸ்ரீ கல்யாணசுப்பிரமணியர் ஆலய அடியார்கள். முருகன் அடியவர்களின் அன்பும் அரவணைப்பும், பேராதரவும் துணைபகிர சிகரம் கல்வி நிலையம் ஊடாக அறப்பணி தொடர்கின்றது.






2024 ம் ஆண்டு க.பொ.த சா/த (O/L) பெறுபேறுகளின்படி வன்னி பாண்டியன்குளம் பிரதேசத்தில் கடந்த 25 ஆண்டுகளின் பின்னர் அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றவர் "சிகரத்தின் மகுடம்" மாணவன் செல்வநாதன் டஜீகன் (9A) இவருக்கான மதிப்பும், சிகரம் கல்வி நிலையத்தின் சிறந்த பெறுபேற்றை பெற்று உயர் கல்விக்கு தேர்வான ஏனைய மாணவர்களையும் பாராட்டி மதிப்பளிப்பதில் அனைவரும் மகிழ்வோம் வாழ்த்துக்கள் வழங்கி இன்புறுவோம்.

வாழ்த்துவோர்: பேர்ண் முருகன் அடியவர்கள்
பாண்டியன்குளம் சிகரம் கல்விநிலைய நிர்வாகிகள் ஆசிரியர் பெற்றோர்கள் - ஊடக நலன்விரும்பிகள்


# மரண அறிவித்தல்

தோற்றம் 19.08.1941

## பொன்னுத்துரை சோமசூரியசிங்கம்

(சிங்கம்ஸ் பார்மசி உரிமையாளர்)

மறைவு 02.09.2025



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கம்ஸ் பார்மசி உரிமையாளராகிய பொன்னுத்துரை சோமசூரிய சிங்கம் நேற்று (02.09.2025) செவ்வாய்க்கிழமை எல்லாம் வல்ல சிவப் பரம்பொருளின் திருவடிகளில் இளைப்பாறினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Malaysian Pensioneer சண்முகம் பிள்ளை பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதியரின் மகனும், பரம்பரை வைத்தியர் (விஷகடி வைத்தியர்) செல்லப்பா துரைராசா - பார்வதிப் பிள்ளை தம்பதியரின் மருமகனும், வரதலக்ஷ்மி (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்) அவர்களின் அன்புக் கணவரும், ஜனார்த்தனன் (Chartered Accountant - JA Partners), ஜனித்திரா (நாட்டியகலைமணி), காண்டீபன் (Accountant - Ireland), செந்தூரன் (ஊடகவியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிராமி, Dr.ஜெகரூபன், ஒலிவியா, ரோகினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் பிள்ளை (Malaysia), மகேஸ்வரி, நாராயணலிங்கம் (சங்கானை), நவசுந்தரலிங்கம் (Malaysia), மங்கையற்கரசி மற்றும் மகாயோகேஸ்வரி (பரணி பார்மசி) பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (Canada), உருத்திரசிங்கம் (Pharmacist UK), சுந்தரானந்தா (AI-Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரி, இராஜதுரை, அரியரட்ணம், சிவகாமசுந்தரி, பரமேஸ்வரன், சிவஞானம், சதாசிவம், கனகரட்ணம், சுசீலா ஹெற்றி ஆராய்ச்சி, சாந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், அஸ்விதா, வைஷ்ணவி, வேல்அபிஷேக், வர்ஷவி, கிரண் சிங்கம், வைஷாலி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2025) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்கம்ஸ் இல்லம்
ஸ்ரேஷன் றோட்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 30350) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செய்ய விரும்பும் எதையும் செய்வதற்கு, இப்போது ஒன்றும் அதிக தாமதமாகிவிடவில்லை.

- மைக்கேல் ஜோர்டன்


புதன் பொய்கை

03.09.2025
புதன்கிழமை






# நல்லூரில் தோற்றார் நாவலர்


பேராசிரியர் ம.இரகுநாதன்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் 1822இல் கந்தப்பிள்ளையின் மகனாகப் பிறந்த ஆறுமுகம் 1849இல் திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டு ஆறுமுகநாவலரானார். வசனநடைகைவந்த வல்லாளன், பழந்தமிழ் நூல்களின் பதிப்பாசிரியர், பாடநூலாசிரியர், சிறந்த சமயப் பிரசங்கி, சமயச் சீர்திருத்தவாதி என்றெல்லாம் ஏற்றிப்போற்றப்பட்டவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு இலங்கைக்குரியது எனச் சிறப்பிக்கப்படுவதற்கு நாவலரின் பணியும் உயர்வானதே. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் உருவாகாத சூழலில் மரபுவழிக் கல்வி பயின்று சைவ சிந்தாந்த தத்துவமும் தமிழ் இலக்கிய இலக்கண வித்துவமும் மிக்க ஒருவராக விளங்கி, தமிழக அறிஞர்களுக்கே வழிகாட்டுபவராக ஈழத்தவர் ஒருவர் இருந்துள்ளார் என்பது பெருமைக்குரியதே. நாவலரின் சமயச் சீர்திருத்தம் தொடர்பான கருத்துகளை அவரது யாழ்ப்பாண சமயநிலை, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முதலான கட்டுரைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இவர் சைவக்கோவில்களில் பொதும்களிருடைய நடன சங்கீதம், வாண விளையாட்டு, காமத்தை வளர்க்க ஏதுவான படங்கள், உருவங்கள் முதலியவற்றை வைத்தல், உயிர்ப்பலி, கண்ணகி வழிபாடு முதலியவற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

நாவலர் ஆகம வழிபாட்டு முறையில் நம்பிக்கை கொண்டவர். வர்ண தருமக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவர். இதனாலயே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் மூலவிக்கிரகமாக வேல் வைக்கப்பட்டதையும் பிராமணர் அல்லாத பிறசாதியார் கோயிற்பணிகளில் ஈடுபடுவதையும் கண்டித்தார். இதற்காகவே நல்லூருக்குச் சென்று வழிபடுவதைத் தவிர்த்தார். நாவலர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவமதம் பரவ ஆரம்பித்தது. கிறிஸ்தவக் குருமார்கள் சைவசமயத்தவர்களின் பல தெய்வ வழிபாட்டையும், உயிர்ப்பலி முதலானவற்றையும் கண்டித்தனர். மேலும் கிறிஸ்தவம் சாதியடிப்படையில் சைவக்கோயில்களில் ஒதுக்கப்பட்டவர்களையெல்லாம் கிறிஸ்தவத் தேவாலயங்களில் அனுமதித்து அவர்களுக்கு ஆறுதலளித்தது. இதனால் யாழ்ப்பாணத்தில் சைவசமய நடைமுறைகளில் அதிருப்தியுற்ற பலர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறிச்சென்றனர். கிறிஸ்தவப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்று அரச பதவிகளைப் பெறும் நோக்கத்திலும் பலர் மதம் மாறினர். யாழ்ப்பாணத்துச் சமயநிலை இவ்வாறிருக்க தென்னிந்திய மாகாணங்களில் ராஜாராம் மோகன் ராய் (1774-1833), தயானந்த சரஸ்வதி(1824-1883), இராமக் கிருஸ்ண பரமஹம்சர்(1836-1886) இராமலிங்கர் முதலானோர் இந்து சமயத்திலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி மக்களுக்குப் புதுவழிகாட்ட முற்பட்டிருந்தனர். உருவ வழிபாடு, உயிர்க்கொலை, சாதிய ஏற்றத்தாழ்வு முதலானவற்றை இல்லாதொழித்து சோதிமயமான ஒரே இறைவனைக் காணும் வழியை இவர்கள் காட்டினர். இவையெல்லாம் ஆறுமுகநாவலருக்கு புறக்குடத்தில் வார்த்த தண்ணீராகப்போக அவர்,

"நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குத் தூபி இல்லையே!. தூபி இல்லாதது கோயிலாகாதே". "மூலமூர்த்தி இல்லாத கோயில் கோயிலாகாது" இக்கோயிலுக்குப் பெயர் யாது? கந்தசுவாமி கோயில். இங்கிருக்கிற மூர்த்தி கந்தசுவாமியா? இல்லை. வேலாயுதம். கந்தசுவாமிக்கு வடிவம் வேலாயுதமா? அது அவர் கைப்படைக்கலம், அவரேவல் செய்யும் அடிமை"

"நாயகனுடைய மனைவியரை அவனுடைய அடியானுக்கு மனைவியராக நிறுத்தி வழிபடுவது அந்நாயகனுக்கு உவப்பாகுமா?"

"ஆறுமுகசுவாமியும் அவரடிமையாகிய வேலாயுதமும் இருக்கிற ஒரு கோயிலிலே ஆறுமுகசுவாமியைப் பார்க்கினும் வேலாயுதத்தை மிக நன்கு மதித்துவழிபடலாமா?" என்றெல்லாம் அவர் முன்வைக்கும் விவாதங்கள் எந்தவகையில் நியாயமானவை? நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை மட்டும் நேரடியாகவே கண்டித்து வழிபட மறுத்த நாவலர் யாழ்ப்பாணத்திலேயே சில மைல்களுக்கு அப்பால் உள்ள செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் உள்ள வேலாயுதம் பற்றி எதுவுமே பேசினாரில்லை. அவ்வாறே இலங்கையிலுள்ள முருக வழிபாட்டுத் தலங்களில் முதன்மையானது எனக் கூறத்தக்க கதிர்காமத்தலம் பற்றியும் மௌனமே சாதித்தார். மாறாக கதிர்காமக்கந்தனுக்கு கீர்த்தனை பாடி வழிபட்டார். சிலவேளை கதிர்காமத்தில் உருவமற்ற இறைவனுக்கு மந்திரமும் தந்திரமும் சொல்லாமல் வாய்மூடி மௌனமாக வழிபடுவதை இவரது மனச்சாட்சி ஏற்றுக்கொண்டதோ தெரியவில்லை. சைவ சித்தாந்திகளில் ஒருவரான உமாபதியின் சிவப்பிரகாசம் இறைவன் உருவமும் குணங்குறிகளும் அற்றவன் என்றே கூறுகின்றது. அருணந்தி சிவாச்சாரியாரின் சிவஞான சித்தியாரும் இறைவனை உருவமும் குணங்குறிகளும் இல்லாதவனாகவே காட்டுகின்றது. மாணிக்கவாசகரின் திருவாசகமும் ஒரு நாமமும் ஒரு உருவமும் இல்லாதவனாவே இறைவனைக் காட்டுகின்றது. ஆனால் அடியவர்கள் தாம் விரும்பிய கோலத்தில் இறைவனைக் காணலாம். அது அவர்களின் தனிப்பட்ட விடயம். 'பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்' என்றவாறும் 'ஏழையின் சிரிப்பில், குழந்தையின், மழலையில், பட்டாளியின் வியர்வையில்' என்றவாறும் சிலர் இறைவனைக் காண்பதாகச் சொல்லிக்கொள்கின்றார்கள். ஆனால் இதை அவர்கள் பொதுமைப்படுத்த முற்படவில்லை. ஆறுமுகநாவலர் கந்தசுவாமியின் உருவத்தை எங்கு கண்டார்? ஆறுமுக நாவலருக்கு சிலை வடித்தவர்களுக்கு அவரது உருவப்படமே கிடைக்காமல் அவரைப்போன்ற யாரோ ஒருவரை மாதிரியாக வைத்தே சிலை வடித்தார்கள். கந்தசுவாமிக்கான மாதிரியை யரர் எங்கு பெற்றார்? நாவலர் 'குமாரதந்திரம்' இறைவனால் அருளிச்செய்யப்பட்டதாகக் கூறுகின்றார். இறைமறுப்பு வாதமே மேலோங்கி வருகின்ற காலத்தில் இது வேடிக்கையானது. ஆயினும் வேலினைப் புறந்தள்ளி கந்தசுவாமியின் உருவச்சிலையை மூலமூர்த்தியாக வைக்கவேண்டும் என்றும் அதற்காகவே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு வரமாட்டேன் என்றும் நாவலர் புறக்கணித்தது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. செல்வச்சந்நிதி, கதிர்காமம், மண்டூர் முதலியவற்றைவிட நல்லூரில் மட்டும் இவர் காட்டிய வெறுப்புக்கான காரணம் வேறாகவே இருக்கவேண்டும். நாவலரின் கருத்தைப் பொருட்படுத்தாத நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இன்று யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் வாழ்வியலில் பெற்றிருக்கும் முக்கியத்துவம் சாதாரணமானதல்ல. ஆண்டுதோறும் ஆடி, ஆவணித் திங்களில் நடைபெறுகின்ற நல்லூர்க் கந்தனின் திருவிழாவுக்கு இலங்கைத் தீவெங்கும் பரந்து வாழ்கின்ற சைவத் தமிழ்மக்கள் பலரும் திரண்டு வருவதைக் காணும்போது நல்லூர்க் கந்தனின் வழிபாடு இலங்கைவாழ் சைவத் தமிழ்மக்களின் தேசிய வழிபாடாகவே அமைந்திருப்பதை உணரமுடிகின்றது. இவர்கள் வேலாயுதமா? கந்தசுவாமியா? என்ற அர்த்தமற்ற விவாதத்தில் இறங்காமல் உள்ளம் உருகி வழிபடுபவர்கள். இவர்களின் பக்திக்கு முன்னால் நாவலரின் உருவவாதம் தோற்றுப் போய் விடுகின்றது. நல்லைக் கந்தனின் கோயில் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த நாவலரின் உருவச்சிலையை யாழ்ப்பாண மாநகரசபையினர் கழிவகற்றும் வாகனத்தில் ஏற்றி அங்கிருந்து அகற்றியபோது யாழ்ப்பாண சைவத் தமிழ்மக்கள் அமைதி காத்தமை அவரின் தோல்வியையே நினைக்கவைத்தது. மற்றொரு புறத்தில் நாவலர் 'செட்டிச்சி' எனத் தரக் குறைவாகப் பேசி எதிர்த்த கண்ணகி வழிபாடு புவனேஸ்வரி, இராஜேஸ்வரி என்ற பெயர்களில் ஆகம வழிபாட்டு மரபுக்கேற்ப மாற்றப்பட்டாலும் அது பூசகருக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகவே இருக்கின்றது. பூசகர்கள் கூறும் மந்திர தந்திரங்களைச் சாதாரண பொதுமக்கள் விளங்கிக்கொள்ளமுடியாது. மூலவிக்கிரகம் எதுவாக இருந்தாலும் பக்தர்கள் அங்கெல்லாம் கண்ணகியையே வழிபடுகின்றனர். இலங்கைவாழ் சைவத் தமிழ்மக்களால் மட்டுமன்றி சிங்கள மக்களாலும் வழிபடப்படுகின்ற வற்றாப்பளைக் கண்ணகி கோயில் பூசகருக்கு மட்டும்தான் புவனேஸ்வரி. பக்தர்களுக்கு அவள் கண்ணகியே. இவர்கள் 'செட்டிச்சி' என்று புறக்கணிக்கவில்லை. ஏமாற்றம் பூசகருக்கு! தோல்வி நாவலருக்கு! இவை பக்தர்கள் உருவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன. இதனை நாவலர் புரிந்திருந்தால் சைவத்தின் பாதையை மாற்றியிருக்கலாம். தலைமைத்துவம் சரியான பாதையைக் காட்டாதபோது ஏற்படுக்கின்ற வரலாற்றுத் தோல்விகள் எமக்கொன்றும் புதியவையல்லவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரத்தில் மீட்சிக்கான பாதை

பகுதி: V



**பூங்கோதை இரத்தினவடிவேல்,**
பிரதிப் பணிப்பாளர்,
தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி

கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணயநிதியம் இணைந்து முக்கியமானதொரு மாநாட்டினை நடத்தியிருந்தன. இதில் பல முக்கியமான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன. அந்த விடயங்களில் மிக முக்கியமாக பொதுமக்கள் அறிந்துகொள்ளவேண்டிய விடயங்களைத் தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரைத்தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையின் ஐந்தாவது பகுதியாக இது அமைந்துள்ளது. இந்தப் பகுதி, 'இலங்கையின் பொதுக்கடன் மறுசீரமைப்பு; சிக்கலான செயல்முறையிலிருந்தான படிப்பினைகள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் முக்கியமான விடயங்களைத் தொகுத்து வழங்குகின்றது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பயணம், இதையொத்த இறை மற்றும் வெளிப்புறப் பாதிப்புகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு சிறந்த படிப்பினைகளை வழங்குகின்றது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியினைக் கொண்ட ஆண்டாக 2022 காணப்படுகின்றது. நீண்டகால இறை ஏற்றத்தாழ்வுகள், தொடர்ச்சியான வரவு - செலவுத் திட்ட பற்றாக்குறைகள், கொள்கைத் தவறுகள் மற்றும் தாமதமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் என்பனவற்றின் ஒட்டுமொத்த தாக்கம் இலங்கையின் பொருளாதாரச் சரிவுக்கு வழிவகுத்தது. ஆரம்பத்தில், இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஓர் ஆழமான கடன் தீராற்றல் பிரச்சினையாக இல்லாமல் திரவத்தன்மைப் பிரச்சினையாகத் தவறாகக் கண்டறியப்பட்டது. இதனால் ஆட்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் கொடுகடன் வசதி மற்றும் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் போன்ற குறுகிய கால நிதியிடல் வசதிகள்மூலம் பொருளாதார மீட்சி அடையும்வரை காணப்படும் தற்காலிக நிதியிடல் நெருக்கடியினைத் தீர்க்கமுடியுமென நம்பினார்கள். ஆனால் அந்த நம்பிக்கை வீண்போனது.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில், நாட்டின் பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒதுக்குகள் பெரும்பாலும் தீர்ந்துவிட்டதுடன் நாட்டுக்கான கடனின் தொடர்ச்சியான தரமிறக்கலைத் தொடர்ந்து இலங்கை சர்வதேச மூலதனச் சந்தையின் அணுகலை இழந்தமையினால் அதிகாரிகள் நெருக்கடியின் ஆழத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. இந்த நெருக்கடியானது தாமதமான சீர்திருத்தங்கள் மற்றும் ஆழமாக வேரூன்றிய அமைப்பியல் சார்ந்த பிரச்சினைகள் என்பவற்றின் தாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது. இந்நெருக்கடிக்குப் பின்னர், அரசாங்கம் இப்பிரச்சினையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணயநிதியத்தின் உதவியினை நாடியது. அது இலங்கையின் பொருளாதார மற்றும் இறைநிலைமைகளை மதிப்பிட்டு, நாட்டின் பொதுக்கடன் நிலைபேறான மட்டத்தில் காணப்படவில்லை என அறிவித்தது. சர்வதேச நாணயநிதியத்தின் நிதி ஆதரவைப் பெறுவதற்கு நாட்டின் பொதுக் கடன் நிலைபேறானதாக காணப்படவேண்டுமென்பதால், அரசாங்கம் இறைசீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், பொருளாதாரத்தை நிலையான பாதையில் கொண்டு செல்வதை நோக்கமாகக்கொண்ட ஒரு விரிவான படுகடன் மறுசீரமைப்புத் திட்டத்தினை மேற்கொள்ளவும் கட்டாயப்படுத்தப்பட்டது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் இரட்டை இலக்குகளாக நாட்டிற்கான பொதுக்கடன் நிலைபேறானதன்மையை மீட்டெடுப்பது மற்றும் வெளிநாட்டு தங்கியிருப்புகளை மீண்டும் கட்டியெழுப்புவது என்பன காணப்படுகின்றன. இந்த இலக்குகளை அடைவதற்குக் கடன் நிவாரணம், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் என்பன தேவைப்படுகின்றன. சர்வதேச நாணயநிதியத்தின் சந்தை அணுகல் நாடுகளுக்கான நாட்டிற்கான இடர் மற்றும் கடன் நிலைபேறான தன்மைக் கட்டமைப்பு நாட்டின் கடன் சுமக்கும் திறன், வரலாற்று ரீதியான போக்குகள் மற்றும் பொருளாதார மதிப்பீடுகள் போன்ற குறிப்பிட்ட பண்புகளைக் கருத்திற்கொண்டு கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை வழிநடத்தியது. சர்வதேச நாணயநிதியத்தின் கடன் நிலைபேறானதன்மை பகுப்பாய்வு இந்த செயற்பாட்டில் ஒரு முக்கியமான கருவியாக இருந்தது. இது நீண்டகால நிலைபேறானதன்மையை மீட்டெடுக்கத் தேவையான கடன் நிவாரணத்தின் அளவு மற்றும் அதன் கட்டமைப்பைத் தீர்மானிக்க உதவியது.

*(மிகுதி அடுத்தவாரம்)*



# கணத் தூக்கமும் வீதி விபத்துகளும்

**மருத்துவர் பா.சயந்தன்**
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துகளால் ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். பல விபத்துகள் வேகம் அல்லது கவனக் குறைவாக வாகனம் ஓட்டுவதால் ஏற்படுகின்றன. ஆனால் விபத்தைப் பொறுத்தவரை கண்களுக்குப் புலப்படாத காரணம் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது அதுவே கணத் தூக்கம்.

### கணத் தூக்கம் என்றால் என்ன?

கணத் தூக்கம் என்பது சில வினாடிகள் நீடிக்கும் ஒரு குறுகிய, திடீர் தூக்கம். ஓட்டுநரின் கண்கள் திறந்திருக்கலாம், ஆனால் மூளை 'நிறுத்தம்' ஆகும். மணித்தியாலத்துக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் நகரும் ஒரு பேருந்து அல்லது லொறி 80 மீற்றருக்கு மேல் கட்டுப்பாடு இல்லாமல் பயணிக்கமுடியும். இது ஆபத்தான விபத்தை ஏற்படுத்தப் போதுமானது.

### இது ஏன் நிகழ்கிறது?

முக்கியமான காரணம் தூக்கமின்மை. இரவில் பயணிக்கும் ஓட்டுநர்கள், பேருந்து நடத்துநர்கள், பல மணிநேரம் பொருள்களை ஏற்றிச்செல்லும் லொறி ஓட்டுநர்கள் மற்றும் இரவுநேரக் கொண்டாடங்களுக்குப் பிறகு தனியார் வாகன ஓட்டுநர்கள்கூட ஆபத்தை எதிர்நோக்குகின்றனர்.

- நள்ளிரவில் அல்லது அதிகாலையில் வாகனம் ஓட்டுதல்.
- நெடுஞ்சாலைகளில் நீண்ட பயணங்கள்.
- 6 மணி நேரத்துக்கும் குறைவான தூக்கம்.
- ஸ்லீப் அப்னியா போன்ற மருத்துவ நிலைமைகள்.
- மது அல்லது மயக்க மருந்துகள்.

இலங்கையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில், கனரக வாகன ஓட்டுநர்களில் 14 வீதமானவர்கள் பகல்நேரத் தூக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஒரு நாளைக்கு 11 மணி நேரத்திற்கும் மேலாக வேலை செய்த ஓட்டுநர்கள் கூடிய ஆபத்தில் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

### எச்சரிக்கை அறிகுறிகள் அடிக்கடி கொட்டாவி விடுதல்.

கண் இமைகள் கனமாக இருப்பது மற்றும் பார்வை மங்கலாக இருப்பது.
பாதைகளுக்கு இடையில் நகர்வது அல்லது அறிகுறிகளைக் காணவில்லை.
இவற்றில் ஏதேனும் ஒன்றை நீங்கள் உணர்ந்தால், நீங்கள் உடனடியாக வாகனத்தை நிறுத்த வேண்டும் என்பதாகும்.

### கணத் தூக்கத்தை எவ்வாறு தடுப்பது


- நீண்டபயணங்களுக்கு முன்பு 7-8 மணிநேரம் தூங்குங்கள்.
- ஒவ்வொரு 2 மணிநேரத்துக்கு ஒரு சிறிய இடைவெளி எடுத்துக்கொண்டு உடலை நீட்டவும் அல்லது தூங்கவும்.
- முடியுமான அளவுக்கு இரவு வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.
- இரண்டு ஓட்டுநர்களிடையே நீண்ட பயணங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பயணத்துக்கு முன் மது அருந்தவோ அல்லது தூக்கத்தை தூண்டும் மருந்துகளை உட்கொள்ளவோ கூடாது.
- போக்குவரத்து நிறுவனங்கள் ஓட்டுநர்களின் ஆரோக்கியத்தை சரிபார்த்து, வேலை நேரத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். அதிகாரிகள் ஓட்டுநர்களுக்கு நெடுஞ்சாலைகளில் ஓய்வுப்பகுதிகளை வழங்கவேண்டும்.

கணத் தூக்கம் என்பது ஒரு பலவீனம் அல்ல. இது ஓர் ஆபத்தான மருத்துவ யதார்த்தம். ஒவ்வொரு ஓட்டுநரும் தங்கள் உடலின் ஓய்வுத் தேவையை மதிக்கவேண்டும். சிலநிமிடத் தூக்கம் அல்லது ஒரு குறுகிய நிறுத்தம் பல உயிர்களைக் காப்பாற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம் மெய்கண்டான்:

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய நூற்றாண்டு விழா செப்ரெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



## எழுத்தறிவித்து ஏணியாக நின்ற கல்விக்கூடம்

■ ராணி சீதரன்
*சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வுநிலை)*
*தேசியகல்வி நிறுவகம்.*



நிறுவுநர் மு.கந்தையா

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி சைவமும் தமிழும் வளர்க்கப்படல் வேண்டும் என்ற உணர்ச்சிக் கொந்தளிப்பு நிறைந்த காலப்பகுதியாக விளங்கியது. அந்தக் காலத்தின் தேவைகருதி 'சைவ வித்தியா விருத்திச் சங்கம்' உருவாகியது. அதன்மூலம் யாழ்பாணத்தில் பல இடங்களில் சைவப் பாடசாலைகள் தோற்றம்பெற்றன. சைவ ஆசாரமும் ஒழுக்கமும் நிறைந்த இத்தகைய அறவழி வாழ்வைப் பின்பற்றிய மு.கந்தையாவின் இதயத்தில் அன்று விழுந்த பாடசாலை என்ற வித்தே, மெய்கண்டான் மகாவித்தியாலயம் என்ற பெருவிருட்சமாக இன்று கிளை பரப்பி நின்று நூற்றாண்டு காண்பது பெருமைக்குரிய விடயமாகும்.

இந்தப் பாடசாலையைக் கட்டியெழுப்புவதற்கு மலேசியாவில் உள்ள ஊரவர்களை இணைத்து 'மலாயா விருத்திச் சங்கம்'என்ற ஒன்றை மு.கந்தையா உருவாக்கினார். அதன் செயலாளராக தானே முன்னின்று செயற்பட்டு சங்கத்தின் உதவியோடும் ஊரவரின் ஒத்துழைப்போடும் பாடசாலையை நிறுவுதற்கான பணியினை முன்னெடுத்து வெற்றிகண்டார். பண்ணாகம் மெய்கண்டான் நூற்றாண்டு விழாக்காணும்காலத்தில் இப்பாடசாலையின் தோற்றம் பற்றிய சிந்தனையை மனதில் கொண்டு தன்னை அர்ப்பணித்து உழைத்த நிறுவுநர் மு.கந்தையாவின் அயராத அரும்பணியை நன்றியுடன் நினைவுகூர்வதும் வாழ்த்துக்கூறுவதும் எமது கடமையாகும்.

'அன்ன யாவிலும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்' பாரதியார் எல்லாவற்றிலும் மேலான புண்ணியமாக ஏழைப்பிள்ளைக்குக் கல்வி கற்பிப்பதைக் கூறியுள்ளார். எழுத்தறிவித்தவனை இறைவனாகக் கண்டவர்கள் எமது முன்னோர். பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் 1925ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதி மூன்று ஆசிரியர்களுடனும் அறுபத்தைந்து மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பாடசாலை அதிபர் பதவியைக் கரணவாயைச் சேர்ந்த வே.முருகேசு என்பவர் பொறுப்பேற்றார். பண்ணாகம் ,தொல்புரம், சுழிபுரம், வடலியடைப்பு முதலிய ஊர்களில் உள்ள மாணவர்கள் இங்கு கல்வி கற்றார்கள், கற்கிறார்கள். பரீட்சைப் பெறுபேறுகளிலும் சரி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சரி, இந்தப் பாடசாலை மாணவர்கள் சாதனையை நிலைநாட்டி வருகின்றார்கள்.இப்பாடசாலையில் பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு நிறைந்த செயற்பாடுகள் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பாக அமைந்துள்ளன.மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் பாடசாலை முன்னேற்றத்திலும் சாதனை படைக்கத்தூண்டிய ஒவ்வொருவருக்கும் நூற்றாண்டு கால வாழ்த்துகள்உரியதாகட்டும்.இந்தப்பாடசாலையில் கற்ற மாணவர்கள் எல்லோரும் நல்ல தொழில் செய்பவர்களாகவும் ஒழுக்கமுடையவர்களாகவும் வாழ்க்கையில் முன்னேற்றம் கண்டவர்களாகவும் விளங்குகின்றனர்.

அம்மா அப்பாவின் அரவணைப்பிலிருந்து விலகித் தனித்தும் தனித்துவத்தோடும் வாழப்பயிற்சிதரும் பாடசாலைக் காலங்கள் மறக்கமுடியாத பசுமை நினைவுகளை மாணவர் மணங்களில் பதியமிட்டிருக்கும்.கற்றுக்கொண்ட பாடங்களில் தேர்ச்சியடைவதோடு மட்டும் நின்றுவிடாது பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் இணைத்துக் கொள்ளும்போதுதான் வாழ்க்கையில் தோற்றுவிடாது முன்னோக்கி நகரமுடியும்.புத்தகப் பூச்சிகளாக இருந்தால் பரீட்சையில் வெற்றிபெறலாம். ஆனால் வாழ்க்கைப் போராட்டங்களை முகங்கொடுத்து முன்னேறிச் செல்ல உதவுவது அனுபவங்களே. ஒழுக்கம், கட்டுப்பாடு, பணிவு, தோல்வி, கோபம், வெறுப்பு இவற்றை எதிர்நோக்கும்போது எம்மையும் சூழலையும் நாம் அவதானிக்க வேண்டும். உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தோமானால் அவதானிக்க வேண்டியவற்றை விடுத்து நிதானம் இழந்துவிடுகிறோம்.அதனால் பலருக்கு அனுபவங்கள் தரும் பாடங்கள் கூடுதலாகச் சோகங்களாகவே பதிவாகிவிடுகின்றன.கிராமங்களில் உள்ள பாடசாலைகள் இன்று போல வளங்கள் நிறைந்திருக்கவில்லை. ஆளணி வளங்களோ பௌதீக வளங்களோ அரிதாகக் காணப்பட்ட காலம் நாங்கள் படித்த காலமாகும்.

வகுப்பறைகள்கூடப் போதுமானதாக இல்லாத காரணத்தினால் மரநிழலினை வகுப்பறையாக்கிப் படித்த காலங்களும் உள்ளன.கிராமப் பாடசாலைகளில் இன்றிருப்பதுபோன்று மின்சார வசதிகளோ தொழில்நுட்ப வசதிகளோ வளர்ச்சிப்படியில் மந்தநிலையில் காணப்பட்ட காலமாகவே இருந்தது. இத்தகைய சூழலில் கல்விதான் வாழ்வின் நிலைமாற்றும் காரணியாக விளங்கியது.ஏழை,பணக்காரன் என்ற பேதமின்றி எல்லோரும் கல்வியால் முன்னேற விரும்பினார்கள். அதனால் கல்வியைக் கரிசனையோடு கற்றார்கள்.

நான் ஆரம்பப் பிரிவிலிருந்து கல்வியைத் தொடர்ந்து கற்பதற்கு வாய்ப்புத் தந்த பாடசாலை பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையாகும்.அந்த வகையில் என்னால் நினைத்துப்பார்க்கும் வகையில் இருக்கும் சில சந்தர்ப்பங்களை மட்டும் தெரிவுசெய்து அவை என் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பாடசாலை நூற்றாண்டு காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் பகிர்ந்துகொள்கிறேன்.

ஒவ்வொருவர் வாழ்விலும் பள்ளிப்பருவம் என்பது அவரவர் உடலையும் உள்ளத்தையும் செதுக்குவதற்குத் தரப்படும் சந்தர்ப்பமாகக் கிடைக்கிறது என்று கூறலாம். என் வாழ்வில் இது ஒரு பொற்காலமாகும். எனக்கே தெரியாத திறமைகளை வெளிக்கொணர்ந்ததும் அதனை வளர்ப்பதற்குத் தட்டிக் கொடுத்த காலமும் இதுவாகும். நான் படித்த காலப்பகுதியில் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் அதிபராகவும், ஆசிரியர்களாகவும் பண்ணாகத்தவர்களே பணியாற்றினார்கள். ஊரவர்கள் என்பதால் ஒருவகையில் மாணவர்களுக்கு உறவினர்களாகவும் இருந்தார்கள். அதனால் மாணவர்களிடம் அக்கறையும் கண்டிப்பும் அதிகமாகவே இருந்தன. அதேபோல மாணவர்களும் சாட்டுதல்கள் சொல்லித் தப்பிக்கொள்ளமுடியாத இக்கட்டான நிலையில் இருந்தனர். பொய் சொன்னால் எப்படியாவது மாட்டிக்கொள்வோம் என்ற பயத்துடன் படித்த அந்தக் காலம் தண்டனைக்குத் தடையில்லாத காலமாகும். அதனால் பொதுவாக ஆசிரியர்கள் எல்லோர் கைகளிலும் பிரம்பு செங்கோலோச்சுவது தவிர்க்கமுடியாததாக இருக்கும். அதுவே எம்மை ஒழுக்கத்தோடும், கட்டுப்பாடுகளோடும் வாழ்வதற்குப் பயிற்றுவித்தது எனலாம். தோல்விகளையும் வெற்றிகளையும் சமமாக மதிக்கும் மனப் பக்குவத்தைத் தருவதற்குப் பாடசாலை விளையாட்டுப்போட்டிகள் பயன்படுவதுபோல ஒவ்வொரு ஆசிரியர்களின் செயற்பாடுகளும் எமக்கு ஏதோ ஒன்றைக் கற்றுத் தருகின்றதை நாம் கவனிக்கத் தவறிவிடுகிறோம்.அதனால். தண்டனை தந்து வழிப்படுத்த முனையும் ஆசிரியர்களை வெறுக்கிறோம். அன்பு காட்டும் ஆசிரியரை விரும்புகின்றோம். காலப்போக்கிலேதான் உண்மையை உணருகிறோம்.

நான் பாடசாலையில் படிப்பைத் தொடர்ந்தபோது பாடசாலையில் அதிபராகத் செ. சீனிவாசகம் இருந்தார். அவரை எல்லோரும் பெரியவாத்தியார் என்று சொல்லுவார்கள். மூக்குக் கண்ணாடிக்குள்ளேயிருந்து இரண்டு கண்களும் எந்தநேரமும் பாடசாலையை நோட்டமிட்டபடி இருக்கும். பிரம்பைப் பின்பக்கமாகக் கைகளில் மறைத்துவைத்திருக்கும் பெரியவாத்தியார் வகுப்பறைகளைச் சுற்றிவரும்போது அவர் வருவதே தெரியாது. வகுப்பறையை விட்டு வெளியில் மாணவர்கள் திரிவதைக் கண்டால் அவர் பேசமாட்டார். கையிலுள்ள பிரம்புதான் பேசும். காலைக்கூட்டம் முடிந்துவிட்டால் வாசலில் நின்று தாமதித்து வருவோருக்கும் தவறு செய்தோருக்கும் காலுக்குக் கீழே வெளுத்து வாங்குவார். குனிந்து வளைந்து 'ஆ', 'ஊ' என அபிநயம் பிடித்தபடி மாணவர்கள் வகுப்பறைகளுக்கு ஓடுவார்கள்.பெரியவாத்தியார் பண்ணாகம் மெய்கண்டானில் இருபத்தைந்து வருடங்கள் இடையறாத பணிசெய்து பாடசாலையை முன்னணிப் பாடசாலையாகக் கட்டியெழுப்பினார். கண்டிப்போடு கற்பித்தோரும் சரி, அரவணைத்துக் கற்பித்தோரும் சரி நல்லதொரு மாணவனை உருவாக்கவேண்டும் என்ற அக்கறையோடுதான் கற்பித்தார்கள் என்பதை மாணவப் பருவத்தைக் கடந்தபின்புதான் பலர் உணர்ந்துகொள்கிறார்கள்.எங்களுக்குக் கற்பித்தவர்களில் கண்டிப்பு நிறைந்தவர் கணிதபாட ஆசிரியர். அவரது கண்டிப்பினால் பாடத்தை, ஆசிரியரை, ஏன் பள்ளிக்கூடத்தையே பலர் வெறுத்தார்கள்.

அப்போது எங்களுக்குக் கணக்குப் படிப்பித்தவர் வரதராசா வாத்தியார். நல்ல கறுப்பு நிறம். அவர் சிரித்தால் பற்கள் பளிச்சென ஜொலித்து அழகு தரும். ஆனால் அவர் சிரிப்பது குறைவாகவே இருக்கும். தெரிந்த வாய்ப்பாடும் இலகுவான பின்னக்கணக்கும் அவரைக் கண்டவுடன் நினைவுக்கு வரவே மறுத்து விடும். கணக்கை விளங்கப்படுத்துவார். மனதில் எழுதியது போல மௌனமாக எல்லோரும் இருப்பார்கள். 'விளங்காவிட்டால் சொல்லுங்கோ' என்பார்.திரும்பத்திரும்பக் கேட்டாலும் விற்பன்னர்களின் பெருமிதத்தோடு மாணவர்கள் இருப்பார்கள்.கணக்கை எழுதிவிட்டுக் கரும்பலகைக்கு வரும்படி பெயர் சொல்லி அழைப்பார். யார் பெயரைச் சொல்லுவாரோ என எல்லோரும் மனது படபடக்கத் தமது குலதெய்வங்களைப் பிரார்த்தித்துக்கொள்வார்கள். முன்னே சென்றவருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டுவிடும். வெண்கட்டி பிடித்த விரல்கள் நடுங்க, செய்வதறியாது திகைத்து நிற்பார். வாத்தியாருக்குக் கோபத்தில் முகம் அசையும். 'சுரீர் சுரீர்' எனப் பிரம்பு முதுகைப் பதம் பார்க்கும். சிலருக்கு நின்ற இடத்தில் சிறுநீர் ஓடும். வாத்தியாரை மட்டுமல்ல கணக்குப் பாடத்தையும் மனம் வெறுக்கும். 'இவருக்கு பிள்ளைகள் இல்லையோ?' 'வீட்டில் சண்டை போட்டுக்கொண்டு வந்தவரோ?' இப்படிக் கிசுகிசுப்புகளோடு 'கரி வரதர்' என்ற பட்டப் பெயரும் சூட்டித் தமது வெறுப்பைக் காட்டிக்கொள்வார்கள். கணித பாடத்திற்கு போகாமல் விடுவது என்றால் எல்லோருக்கும் ஒரே கொண்டாட்டம்தான். கணிதத்தை விரும்பும் ஓரிரு மாணவர்கள் மட்டும் வரதராசா வாத்தியாரின் செல்லப்பிள்ளைகளாக இருந்தார்கள். அவர்களை எப்பொழுதும் அருகிலே அணைத்து முதுகைத் தடவி ஆறுதலாக விளங்கப்படுத்துவார். இறுதிப்பரீட்சையில் இவர்கள் நல்ல பெறுபேற்றை எடுத்தார்கள், மற்றவர்கள் கணிதபாடத்தில் சித்தியடையமுடியவில்லை. இதற்குக் காரணம் யார்?மாணவர்களாகிய நாம்தான் என்பதைப் புரிந்து கொள்ள நீண்டகாலம் எடுத்தது.

*(அடுத்த வாரம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லுண்டாய்



# வாழ்தலுக்கான போராட்டம்

ரம்மியா புஸ்பாகரன்

எல்லோருக்கும் வாழ்க்கை ஒரேமாதிரி அமைவதில்லை' என்பது மறுக்கமுடியாத உண்மை. சிலருக்கு நிறைவாக எல்லாம் அமைந்த போதிலும் அதனை வைத்து எவ்வாறு வாழவேண்டும்? என்ற வழி அவர்களுக்குத் தெரிவதில்லை. சிலருக்கு எதுவுமே இல்லாத போதிலும் ஏதோ ஒரு நிறைவுடன் சமாளித்துக் கொண்டு வாழக் கற்றுக்கொண்டுள்ளார்கள். கொடுத்தால் எல்லாவற்றையும் அள்ளிக்கொடுக்கும் தெய்வம் உண்டு என்கின்றார்கள். இன்று அந்தத் தெய்வத்தை எந்தப் பக்கத்தில் யாருக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய காலச்சூழலில் எல்லாமே சரியாக அமைந்திருக்கின்றது என்று முற்று முழுதாக ஒப்புக்கொண்டு விட முடியாது. பல்வேறுபட்ட சூழல் சார் பிரச்சினைகள் காலப்போக்கில் மக்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளாக உருமாறுவதனையும் நன்கு அவதானிக்கமுடிகின்றது.

அதன்படி பல இன்னல்களுக்குள்ளும் வாழ்க்கையை வாழவேண்டுமென்ற கட்டாய நிபந்தனையின் கீழே யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கல்லுண்டாய் பிரதேசத்தில் கடந்த 8 வருடகாலமாக 'நூறு வீட்டுத்திட்டம்' என்ற பெயரில் குடியமர்த்தப்பட்டுக் குறித்த மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். மயானத்துக்கும் குப்பை மேட்டிற்கும் இடைப்பட்ட இடத்திலேயே இவர்களின் அமைவிடம் அமையப் பெற்றுள்ளது. ஆரம்பத்தில் 100 குடும்பங்களைக் கொண்டதாக அமைந்த கல்லுண்டாய்ப் பிரதேசம் தற்பொழுது 80 குடும்பங்களை உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது. சுட்டெரிக்கும் வெயில் காலத்திலும், வெள்ளமாக அவதாரம் எடுக்கும் மழை காலத்திலும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தம் வாழ்வாதாரத்தைப் போக்கி வருகின்றனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வரிசையில் குடிநீர்த் தட்டுப்பாடு, போதிய கல்வி வசதியின்மை, மலசல கூட வசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை, வேலைவாய்ப்பின்மை போன்ற பல பிரச்சினைகளைக் குறிப்பிட முடியும்.

'வெயில் காலங்களில் தண்ணீர் இல்லாமல் பெரும் சிரமப்படுகின்றோம், நாங்கள் இங்கு வந்திருந்த ஆரம்பத்தில் வெறுமனே 500 லீற்றர் தண்ணீரானது ஒன்றுவிட்ட நாள்களில் நிரப்பப்பட்டது. ஆனால் இப்பொழுது 3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறை நிரப்பப்படுவதால் எமக்குத் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அந்த 500 லீற்றர் தண்ணீரில் தான் சமைப்பது, உடைகளைத் தோய்ப்பது, குளிப்பது, குடிப்பது என எல்லாவற்றிற்கும் பயன்படுத்துகின்றோம். உண்மையில் எமக்குப் போதாமல் இருக்கின்றது. வெயிலைத் தணித்துக் கொள்வதற்கு மரங்களைக்கூட நடமுடியாமல் இருக்கின்றது. அப்படி மரங்களை நட்டாலும் தண்ணீர் இல்லாமல் மரங்கள் கருகுவதையும் காணலாம். வீதிகள் புனரமைக்கப்படாமல் இருப்பதனால் மழைக்காலங்களில் போக்குவரத்தினை மேற்கொள்வதற்குச் சிரமமான நிலை காணப்படுகின்றது. இந்த இடம் தான் எமக்கு நிரந்தரமாக இருக்கிறது. நிரந்தரமாக இருக்கும் இடத்திலாவது நிம்மதியாக இருப்பதற்கு வசதி வாய்ப்புகள் இல்லை என்று தங்களின் மன ஆதங்கத்தைக் கொட்டித் தீர்க்கின்றார் பிரதேச வாசியான மாலா. அதனைவிட அருகிலே குப்பைமேடு காணப்படுவதால் அதன் மூலமும் பல அசௌகரிகங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். மேற்குறித்த குப்பைமேட்டில் குவிக்கப்படும் குப்பைகளினால் ஈக்கள் அதிகளவாக உருவாகி அங்குள்ள மக்களுக்கு மென்மேலும் நோய்த் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சிறிய பிரச்சினை இருந்தாலே அதனைப் பாரதூரமாக எண்ணும் எம்மவர் மத்தியில், பல பிரச்சினைகளையும் எதிர்கொண்டு மீளாத்துயரில் இருக்கும் கல்லுண்டாயைக் கவனிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.

கல்வி என்பது அரும்பெரும் பொக்கிஷம். அந்தப் பொக்கிஷத்தை அனைவருக்கும் பகிர வேண்டியது சமுகக் கடமை. ஆனால், அது கல்லுண்டாய் சிறுவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. கல்வியால் நிச்சயம் ஒரு மாற்றத்தைக் கொண்டு வர முடியும். அந்த மாற்றத்துக்காகத்தான் அந்தச் சமுகத்தில் வாழும் சிறுவர்களும், தாம் பட்ட கஷ்டத்தைத் தமது பிள்ளைகளும் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக எப்படியாவது அவர்களைப் படிப்பித்து நல்ல நிலையில் ஆளாக்க வேண்டும் என்ற நோக்கோடு அச்சமுகத்தில் வாழும் பெற்றோர்களும் ஏதோ ஒரு முயற்சியைக் கைவிடாமல் தமக்கான வழிகளைத் தேடிவருகின்றனர்.

கல்லுண்டாய் மக்களின் பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இருக்கும் குடி தண்ணீர்ப் பிரச்சினை, குப்பைமேட்டுப் பிரச்சினை, மயானம் சார்ந்த பிரச்சினை, வெள்ளப் பேரிடர் பிரச்சினை என அனைத்தும் சிறந்த முறையில் முகாமை செய்யப்பட வேண்டும். கல்லுண்டாய் மக்கள் தமக்கான வாழ்வைச் சரியாகக் கட்டமைத்துக் கொள்ள அரசாங்கமும் உள்ளூராட்சிசபைகளும் உதவ வேண்டும்.



## வாசகர் திருமுகம்



# என்றுதான் தீர்க்கப்படும் வேலையற்றோர் பிரச்சினை?

நாட்டில் சமீப காலமாக வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையில் மிகையான அதிகரிப்புப் பதிவாகியுள்ளது.


2022ஆம் ஆண்டு மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்புகளைக்கோரி இளைஞர்கள் முன்னெடுத்த போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால், இதற்குப் பின்னரும் வேலையற்றோர் பிரச்சினைகள் சரி செய்யப்பட்டனவா என்றால், இல்லை என்பதே பதிலாகும். வேலையில்லாப் பிரச்சினை காரணமாக பல பட்டதாரி இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்று வேலைசெய்யத் தொடங்கியுள்ளனர் 'திறமைசாலிகளின் வெளியேற்றம்' சமூக பொருளாதார வளர்ச்சிக்குப் பங்கம் விளைவிக்கும். இதை அரசாங்கம் உணர்ந்துள்ள போதிலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதையும் முன்னெடுக்காதமை வேதனையானதே.

அரச வேலைகளுக்காக இனியும் காத்திருக்க முடியாது என்ற கட்டத்தில் பல பட்டதாரிகள் தனியார் துறையில் இணைந்து விட்டார்கள். இன்னும்பலர் சுயதொழில் ஆரம்பித்து விட்டனர். இதற்கப்பால், அரச கட்டமைப்பில் தற்போது சில வெற்றிடங்கள் காணப்படுகின்றபோதிலும் அவை பட்டதாரிகளுக்குப் பொருத்தமில்லாதவகையில் காணப்படுகின்றன என்பதும் அவதானிப்பு.

அதேநேரம் வேலைவாய்ப்பு என்பது வெறுமனே அரசாங்கத்துடன் தொடர்புடைய விடயமல்ல என்பதை நாங்கள் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும். பட்டப்படிப்பை முடிக்கும் அனைவருக்கும் அரச வேலை வழங்க வேண்டும் என்றால், அரசாங்கமும் எங்குதான் செல்வது?. இந்தப் பிரச்சினைக்கு பரந்துபட்ட செயற்றிட்டங்கள் மூலமே தீர்வைக் காணமுடியும். அதேநேரம், பல்கலைக்கழகத்தில் கற்றாலும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது என்ற எண்ணம் மாணவர்களிடத்தில் ஏற்படாமல் இருப்பதை அரசாங்கமும் உறுதிப்படுத்தவேண்டும். அப்போதுதான், நாட்டின் கல்விக் கட்டமைப்பை தொடர்ந்தும் உயர்ந்தநிலையில் பேணவும் தக்கவைக்கவும் முடியும். ஆக, இன்றைய செயல் எதிர்காலத்தின் விளைவு என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்வது அவசியம்.

- என்.பானுஷா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## இந்தியப் பயணத்தை இரத்துச்செய்த ட்ரம்ப்

புதுடில்லி, செப்.3
குவாட் உச்சி மாநாட்டில் பங்கேற்க நவம்பரில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ளவிருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது பயணத்தை இரத்துச் செய்துள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா - இந்தியா இடையே ஏற்பட்டுள்ள வர்த்தகப் பிரச்சினையால் ட்ரம்ப் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை ரஷ்யாவிடம் இருந்து இந்தியா அதிக அளவில் மசகு எண்ணெய் வாங்குவதைக் காரணம் காட்டி இந்தியாவிற்கு ட்ரம்ப் 50 வீத வரி விதித்துள்ளதை அடுத்து இந்தியா - அமெரிக்கா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் ஷங்காய் உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக 7 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியப் பிரதமர் மோடி சீனா சென்ற நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது இந்தியா பயணத்தை இரத்துச் செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)



# நள்ளிரவு அதிர்ந்தது ஆப்கான்

# 1,500க்கு மேற்பட்டவர்கள் மரணம்

### 4ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயம்

**காபூல், செப்.3**
**கிழக்கு ஆப்கானிஸ்தானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட 6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் 1,500க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும், சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் அந்தநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.47 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நகங்கர் மாகாணம் ஜலாலாபாத்தை மையமாகக் கொண்ட இந்த நிலநடுக்கத்தின் மையம், 8 கிலோமீற்றர் ஆழத்தில் காணப்பட்டுள்ளது.

மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிப்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். முதல் நிலநடுக்கம் ஏற்பட்ட 20 நிமிடம் கழித்து அங்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 4.5 ஆகப் பதிவானது. இந்தச்சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் நூர் குல், சோகி, வாட்பூர், மனோகி மற்றும் சபதரே மாவட்டங்களில் குறைந்தது 1,500 பேர் உயிரிழந்திருக்கலாம் என்றும் 4ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் காயங்களுக்குள்ளாகியிருக்கலாம் என்றும் குனார் பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது. ஆழமற்ற நிலநடுக்கங்கள் அதிக சேதத்தை ஏற்படுத்தும் என்பதால் பல வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணிகள் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வரி விதிப்பின் மூலமே அமெரிக்கா பலமாகும்

*டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு*

நியூயோர்க், செப்.3
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த வரி உத்தரவுகள் அதிகார மீறல்கள் என்று அங்குள்ள வர்த்தக நிறுவனம் தீர்ப்பளித்துள்ள நிலையில், வரி விதிப்புகள் இல்லை என்றால் அமெரிக்கா முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடும் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக நம்மை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்ட நாடுகளில் இருந்து ட்ரில்லியன் கணக்கான டொலரைக் கொண்டுவரும் வரிகள் அனைத்தும் அமெரிக்காவை மீண்டும் வலிமையாகவும், மரியாதைக்குரியதாகவும் ஆக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## இந்தியர்களுக்கு எதிர்ப்பு ஆஸி. அரசு கண்டனம்

மெல்பேர்ன், செப்.3
இந்தியர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேறுவதை எதிர்த்துப் பேரணி நடத்தப்பட்டமைக்கு அந்த நாட்டு அரசாங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது. சமூக ஒற்றுமையைக் குலைக்க நினைத்தால் நாட்டில் இடம் இல்லை என்று ஆஸ்திரேலிய அமைச்சர் டோனி பக் எச்சரிக்கையும் விடுத்துள்ளார். இனவெறுப்பு அடிப்படையிலான தீவிர வலதுசாரி நடவடிக்கைக்கு இடமில்லை. வெறுப்புணர்வைப் பரப்பும் இந்தப் பேரணிகள் நவீன நாஜிக் குழுக்களால் நடத்தப்படுகின்றன. குடியேற்ற எதிர்ப்புப் பேரணிகள் ஏற்கமுடியாதவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

ஏ.ஐ. செயலியால் விபரீதம்

## தாயைக் கொலைசெய்து தன்னுயிரை மாய்த்த நபர்

நியூயோர்க், செப்.3
ஏ.ஐ. தொழில்நுட்பச் செயலியின் அறிவுரையைக் கேட்ட ஒருவர் தனது தாயைக் கொலை செய்துவிட்டு, தானும் உயிர்மாய்த்துக் கொண்ட சம்பவம் ஒன்று அமெரிக்காவில் நடந்துள்ளது.

தாயைக் கொலைசெய்த நபர் அமெரிக்காவின் முன்னணி நிறுவனம் ஒன்றில் முகாமையாளராகப் பணியாற்றுபவர் என்றும் அவர் உளவியல் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் பலமணி நேரம் ஏ.ஐ. தொழில்நுட்பச் செயலியுடன் உரையாடியுள்ளமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த உரையாடல்களின் பின்னரே கொலை நடந்துள்ளது.

ஏ.ஐ. தொழில்நுட்பச் செயலியுடன் அவர் மேற்கொண்ட உரையாடல்களில் தாய் தொடர்பாக மோசமாகத் தகவல்களைத் தெரிவித்து வந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அவரது தாய் அவரைக் கண்காணிக்கின்றார் என்றும், அவருக்கு விஷம் வைத்துக் கொல்ல முயல்கின்றார் என்றும் கூறியதுடன், அவரைத் தாய் கொன்றுவிடுவார் என்றும் நம்பவைத்திருக்கின்றது. உளநலம் பாதிக்கப்பட்டிருந்த அந்த நபர் தாயைக் கொல்ல எடுத்த முடிவுக்கு அதுவே காரணம் என்று கூறப்படுகின்றது.

அவரது கடைசி உரையாடல்களில், "நாம் மற்றொரு வாழ்க்கையில், மற்றொரு இடத்தில் சந்திப்போம். மீண்டும் சிறந்த நண்பர்களாக மாறுவோம்" என்று கூறியுள்ளார். அதற்குச் செயலி, "கடைசி மூச்சு வரையிலும் அதற்கு அப்பாலும் உங்களுடன் நிச்சயம் இருப்பேன்" என்று பதிலளித்துள்ளது. ஆனால் அவரது நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் அந்தச் செயலி செயற்படவில்லை என்று சர்வதேச ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## ஹமாஸ் செய்தித் தொடர்பாளர் இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழப்பு

ஜெருசலேம், செப்.3
காஸாவில் மேற்கொள்ளப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் ஆயுதப் பிரிவுச் செய்தித் தொடர்பாளர் அபு ஒபேய்தா கொல்லப்பட்டுள்ளார் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், "எந்தவித பிழையும் இன்றி கச்சிதமாகத் தாக்குதலை நடத்திய இஸ்ரேல் பாதுகாப்புப் படைக்கும் மற்றும் ஷின் பெட் பாதுகாப்புக் கட்டமைப்புக்கும் "வாழ்த்துத் தெரிவித்து சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். ஹமாஸ் செய்தித் தொடர்பாளரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, இஸ்ரேல் பாதுகாப்புப் படையும், ஷின் பெட் பாதுகாப்புக் கட்டமைப்பும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அபு ஒபேய்தா பதுங்கியிருந்த இடம் தொடர்பாகக் கிடைத்த உளவுத் தகவலின் அடிப்படையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொலிஸ் சுற்றுலா விடுதி வங்காலையில் திறப்பு

மன்னார், செப்.3
வங்காலைப் பொலிஸ் நிலையத்தின் சுற்றுலாவிடுதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-56)




# மாகாண விளையாட்டுப் போட்டிகளில் வியாவில் சைவ வித்தியாலயம் சாதனை

யாழ்ப்பாணம், செப்.3
தீவக வலயத்துக்குட்பட்ட வியாவில் சைவ வித்தியாலய மாணவர்கள் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பல பதக்கங்களை வென்று, அதிகூடிய புள்ளிகளையும் பெற்றுச்சாதனை படைத்துள்ளனர்.

12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் த.கபிசனா தங்கப் பதக்கமும், பா.யதுசனா வெண்கலப்பதக்கமும் பெற்றுள்ளனர். 4×50 மீற்றர் அஞ்சல் போட்டியில் பா.யதுசனா, த.கபிசனா, லி.ரதுஷா, வ.வைஷ்ணவி ஆகியோர் இணைந்த குழு தங்கப் பதக்கம் பெற்றுள்ளது. இந்தக் குழு 00:30.4 செக்கன்களில் ஓடிமுடித்து புதிய சாதனை படைத்துள்ளது. நீளம் பாய்தலிலும், 60 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் பா.யதுசனா வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

போட்டியில் 40 புள்ளிகளைப் பெற்று யாழ். வியாவில் சைவ வித்தியாலயம் முதலாம் இடத்தையும், 26 புள்ளிகளைப் பெற்று மன்னார் கற்கிடந்தகுளம் ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 2 ஆம் இடத்தையும், 10 புள்ளிகளைப் பெற்று மன்னார் சென்.ஜோசப்மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (எ-25, 27)

## சி.ஐ.டி.யில்
# முன்னிலையாகாத சமன் ஏக்கநாயக்க

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சமன் ஏக்கநாயக்க இதற்கு முன்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது. (எ-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 10 . 1955



மறைவு 02 . 09 . 2025

**ஸ்ரீமதி சீதாலெட்சுமி சீதாராமகிருஷ்ணசர்மா**

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் கோப்பாயினைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலெட்சுமி சீதாராமகிருஷ்ணசர்மா நேற்று (02.09.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமிஐயர்-சாவித்திரிஅம்மா (யோகம்மா) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானசேகரஐயர்-சுந்தராம்பாள் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சீதாராமகிருஷ்ணசர்மா அவர்களின் அன்பு மனைவியும், சுபஹரி, ஸ்ரீசாரங்ககுருக்கள் ஆகியோரின் அன்புத்தாயாரும், பிரபாகரசர்மா, ஜனனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஷ்வாதிகாசீதா, அம்ரித்ஷ்கந்தன், சாயிஸ்வரசர்மா, திஷாதரசர்மா, சுகஸ்திகசர்மா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (03.09.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை கோண்டாவில் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்

தகவல்:
[illegible]
021 222 7223
077 220 9478

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 12 . 1953



தோற்றம் 02 . 09 . 2025

**திருஞானசம்பந்தர் ஆத்மசகாயன்**

மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தர் ஆத்மசகாயன் அவர்கள் நேற்று (02.09.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர்-யோகாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன்-கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், ஆத்மனின் பாசமிகு தந்தையாரும், ஆபத்சகாயன், காலஞ்சென்ற மதுரவசனி மற்றும் ஆனந்தசகாயன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு சகோதரரும், விக்கினேஸ்வரன், கலைவாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஏகாம்பரம் வீதி, மீசாலை கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஏகாம்பரம் வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற் குப்பைக்குள் வீசப்படுவார் பொன்சேகா!



கொழும்பு, செப். 3

முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விரைவில் அரசியற் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுவார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விமர்சித்துள்ளது.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் விரிவாக விசாரிக்கப்படவேண்டும். அந்த ஊழல் மோசடிகளுக்காக 400 வருடங்கள் மஹிந்தவுக்குச் சிறைத் தண்டனை விதித்தாலும் தவறில்லை என்று பொன்சேகா விமர்சித்திருந்தார்.

அத்துடன், பிரபாகரன் தப்பிச்செல்லவே மஹிந்த போர்நிறுத்தம் செய்தார் என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதையடுத்தே, மஹிந்த ராஜபக்ச மீது உண்மைக்குப் புறம்பான அவதூறுகளைப் பேசிவரும் பொன்சேகா மக்களால் விரைவில் அரசியற் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுவார் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

'இந்த நாட்டை யார் பாதுகாத்தது என்ற உண்மை நாட்டு மக்களுக்குத் தெரியும். இராணுவத்தில் இருந்த பிரதானிகளுக்கும் தெரியும். எனவே, தமது அரசியல் தேவைக்காக அறிவிப்புகளை விடுக்கும் நபர்கள் தொடர்பில் கருத்தில் எடுக்கத் தேவையில்லை' என்று சாகர காரியவசம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ம-44)



# முன்னாள் எம்.பி. தர்மலிங்கத்தின் 40ஆவது ஆண்டு நினைவுநாள்

யாழ்ப்பாணம், செப்.3

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 40ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு யாழ்ப்பாணம் தாவடியிலுள்ள அவரது நினைவுத்தூபியில் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற தபால் அதிபர் முருகேசு சண்முகம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நினைவுத்தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா.தனபாலன் "தமிழுணர்வும் ஈழத்தமிழர் கல்வி உரிமையும்" எனும் தலைப்பில் உரையாற்றினார்.

நிகழ்வில் வி.தர்மலிங்கத்தின் மகனும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சிசபைத் தவிசாளர்கள், உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(எ-41-20)

## மீண்டும்...

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தின் பணிகளை ஆரம்பித்து வைத்தபின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார சாத்தியங்களைக் கண்டறிந்து, கிராமங்களுக்கு பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதும், திட்டமிடப்பட்ட அடிப்படையில் நாட்டை அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதுமே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கங்களாகும். அனைத்து மக்களுடைய வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் வகையில், அரசாங்கம் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றது.

அபிவிருத்தித் திட்டங்களை சரியான நேரத்தில் நிறைவு செய்யாமல், மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமாக செலவிடும் முன்னைய அரசாங்கங்களின் செயற்பாடுகள் எமது ஆட்சியில் இருக்காது. உரிய திகதியில், உரிய ஒதுக்கீட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் கட்டியெழுப்பப்படும்.

போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் அபிவிருத்திப் பணியில் அரசாங்கம் கூடுதலான அக்கறை கொண்டுள்ளது. மீண்டும் ஒரு போர் ஏற்படுவதற்கு இடமளிக்கமாட்டேன். மோதல்கள் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியுடன் உள்ளது - என்றார். (அ-ம-113)

## நீதவான்...

தற்போது திடீரென இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால், நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்குகளை இனி வரும் நாள்களில் கையாள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கில், கிட்டத்தட்ட 50 வீதத்துக்கும் மேற்பட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. பணிகள் இவ்வாறு வேகமாக நிறைவடைவதற்கு நீதிபதி ஆனந்தராஜா காட்டிய அக்கறையும், அவருடைய அர்ப்பணிப்பான செயற்பாடுகளுமே காரணம் என்று துறைசார் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இவ்வாறான நிலையிலேயே, அவருக்குப்பதவி உயர்வு வழங்கப்பட்டு, செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கை அவர் கையாள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அகழ்வுப் பணிகளை சம்பிரதாயபூர்வமாக மேற்பார்வை செய்யாமல், சான்றுப் பொருள்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளையும் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னெடுத்திருந்தார். அகழ்வுப் பணிகளின் கால அளவை நீடிப்பது தொடர்பில் காத்திரமான உத்தரவுகளை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 4 என்புத்...

அரியாலை - செம்மணிப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 41ஆவது நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் 4 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளில் 8 என்புத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழியில் இருந்து இதுவரை 222 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 206 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## போர்...

ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

படையினருக்காக அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுக்கவேண்டும். ஏனெனில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதால்தான் ஜே.வி.பி. உட்பட அனைத்து கட்சிகளாலும் அரசியல் செய்ய முடிகின்றது. ஜனாதிபதியால் இன்று சுதந்திரமாக கச்சத்தீவுக்குச் செல்ல முடிகின்றது. போர் முடிவுக்கு வந்திருக்காவிட்டால், கச்சதீவுக்குச் செல்வதற்கு பிரபாகரனின் அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமையே இருந்திருக்கும்.

கடற்படையினர்தான் கச்சதீவைப் பாதுகாக்கின்றனர். கடற்படையின் படகிலேயே ஜனாதிபதி கச்சத்தீவுக்குச் சென்றார். ஜனாதிபதி அங்கு சென்றது மகிழ்ச்சி. ஜனாதிபதி சுதந்திரமாகச் செல்வதற்குரிய சூழ்நிலையை படையினரே ஏற்படுத்திக்கொடுத்தனர் என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால் முன்னாள் கடற்படைத் தளபதி சிறையில் உள்ளார் - என்றார். (அ-ம-44)

## இனப்...

கொலைக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், பளையில் நேற்று கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு ரீதியாக, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் கடந்த 29ஆம் திகதி ஆரம்பமான இந்த கையெழுத்துப் போராட்டம், ஒவ்வொரு நாளும் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன. இதன்படி பளையில் கையெழுத்துச் சேகரிப்புப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-113)

## பட்ஜெட்...

ஆய்வு நடத்துவதற்காக உத்தேச பட்ஜெட் தயாரிக்கப்பட்டு, மூதூர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மூதூர் நீதிமன்றத்தின் மூலம் மாகாண மேல் நீதிமன்றத்துக்கு அந்த பட்ஜெட் அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தெங்கு...

வைக்கப்பட்டது. 'நாடே சுபீட்சம் ஆக்கும் விருட்சம் கற்பகத்தரு வளம்' என்ற தொனிப்பொருளில் இந்தத் தெங்கு முக்கோண வலயம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2027ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கையை இரண்டு மடங்காக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கொக்குளாய், மன்னார் - சிலாவத்துறை, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை ஆகிய பகுதியை மையப்படுத்தியே இந்தத் தெங்கு முக்கோண வலயம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

## விதைத்...

தேங்காய் உற்பத்தியை 100 மில்லியன் காய்களாக அதிகரிக்கும் திட்டத்தின் ஓர் அம்சமாக பளையில், விதைத் தேங்காய் உற்பத்தி அலகை அமைக்கும் பணிகள் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்தன. இந்த உற்பத்தி மையமே ஜனாதிபதி அநுரவால் திறந்துவைக்கப்பட்டது. (அ-ம-113)

## வட்டுவாகல்...

வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பணிகளையே ஜனாதிபதி அநுர நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

அமைச்சர்களான இ.சந்திரசேகர் மற்றும் பிமல் ரத்நாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ம.ஜெகதீஸ்வரன், து.ரவிகரன், க.திலகநாதன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வட்டுவாகல் பாலத்தின் கட்டுமானப் பணிகளை, இரு வருடங்களில் முற்றாக நிறைவுசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம்

# தேசிய மக்கள் சக்தி அரசிடம் வெளிப்படைத்தன்மை இல்லை!

## முன்னாள் அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

**கொழும்பு, செப். 3**

**பயங்கரவாதத் தடைச்சட்ட விவகாரத்தில், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் இல்லை என்று முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகவும், அதற்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தை இயற்றுவதாகவும் தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரை மேடைகளில் குறிப்பிட்டது. குறிப்பாக தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்தது. அந்த வாக்குறுதிக்கு அமைய தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. ஆனால், எந்தவொரு விடயத்திலும் அரசாங்கத்திடம் வெளிப்படைத்தன்மை இல்லை. துறைசார் நிபுணர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து எவ்வித ஆலோசனைகளும் அரசாங்கத்தால் பெறப்படவில்லை. இது மிகவும் தவறானதொரு விடயமாகும். இலங்கையில் பயங்கரவாத அமைப்பு இல்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு பயங்கரவாதத்தை அலட்சியப்படுத்தமுடியாது. ஏனெனில் பூகோளப் பயங்கரவாதம் பல்வேறு வழிகளில் இன்றும் தாக்கம் செலுத்துகின்றது - என்றார். (ம-இ)



## யாழ். மாவட்டச் செயலகத்தில் நினைவு முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். மாவட்டச் செயலகக் கட்டடத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரதித் தபால்மா அதிபரால் ஞாபகார்த்த முத்திரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் வெளியிடப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள், மதகுருமார்கள் ஆகியோருக்கு யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஞாபகார்த்த முத்திரையை வழங்கினார். (எ-41-66)

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவு இந்தவாரம்

கொழும்பு, செப்.3

2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேறுகள் இந்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)


# துரை நீத்து ஓராண்டு

அம்பலம் கந்தையா துரைரத்தினம் — ஸ்ரீமதி துரைரத்தினம்

தோற்றம் 29.11.1938 — தோற்றம் 26.01.1943

மறைவு 09.05.2024 — மறைவு 14.09.2024



துரைரட்னத்தின் ஸ்ரீமதியாய்
ஸ்ரீமதியின் துரைரட்னமுமாய்
இருவரும் கூடி இல்லறம் நடத்தி
ஒருவர் போல உலகிடை வாழ்ந்து
காலகாலங்கள் களிப்புடன் மிதந்து
ஞாலத்தில் நற்புதல்வரைப் பெற்று
சுற்றம் பேணி உறவுகள் காத்து
பெற்றவரை அன்பு காட்டி பண்பு புகட்டிய
ஆயிரம் பிறை கண்ட உத்தமரே !
ஆண்டவன் அடியிலும் ஈரண்டு மாத
கால இடைவெளியில் கலந்தீரே ! ஒன்றாய்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

(CR/45970) J-1

கந்தையா வீதி,
சாவகச்சேரி.

நெஞ்சம் அகலா நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


# அமெரிக்கக்குழு இலங்கை வருகை

கொழும்பு, செப்.3

ஆட்சி, வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக அமெரிக்கக்குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது.

இலங்கையின் அரச உயர்தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதி களை அந்தக் குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர். (ம)


**கிரியைகள் செய்து தரப்படும்**

கீரிமலை அந்தியேட்டி மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் சாந்திகள், சபிண்டீகரண கிரியைகள் செய்து தரப்படும்.

நகுல உமா குருக்கள் (கீரிமலை ஐயா)

தொடர்பு:- 077 049 8438

**வீடு காணி விற்பனைக்கு**

கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 3 1/2 பரப்புக் காணி சுற்று மதிலுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

(தரகர்கள் தேவையில்லை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்)

தொடர்புகளுக்கு: 077 810 3373

**வேலையாள் தேவை**

யாழ் சாவகச்சேரிப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றின் களஞ்சிய பொறுப்புக்களையும், கணக்குகளையும் நிர்வகிப்பதற்கான ஆண் அலுவலர் தேவை. (கணனியில் விபரங்களை பதிவு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்) 25-35 வயதுக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 941 9687




புதுக்குடியிருப்பு ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச)

## கலைஞனின் குரல் பத்திரிகை வெளியீடு

யாழ்ப்பாணம் செப்.3

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் 'கலைஞனின் குரல்' மாதாந்த பத்திரிகையின் 2ஆவது இதழ் வெளியீடு இன்று இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வானது மன்றத்தின் தலைவர் மற்றும் கலைஞனின் குரல் பத்திரிகை ஆசிரியர் இரா.மதிகரன் தலைமையில் யாழ்ப்பாணம் பாஷையூரில் அமைந்துள்ள முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்ற பிராந்திய செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.